Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 28, 2022

திங்கட்கிழமை, நவம்பர் 28, 2022 | ஒளி: 08 கதிர்: 152 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

உணவு பணவீக்க பட்டியலில்

## இலங்கைக்கு 6ஆம் இடம்

உலகளாவிய ரீதியில் உணவு பணவீக்கம் அதிகமாக உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை 6 ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக உலக வங்கியின் அண்மைய மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



இனப்பிரச்சினைக்கு

# தீர்வை பெற்றுவிடலாமென ஜனாதிபதி நம்புகின்றார்

■ பேரின்பராஜா சபேஷ்

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள், இன நல்லிணக்கம் தொடர்பாக சிந்திக்கத் தொடங்கியுள்ள சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்காக தீர்வைப் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாக ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மக்களை நினைத்தே வருந்துகிறேன்

### ராஜபக்ஷ குடும்பம் நிராகரிக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படவில்லை



ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் நேரடியாக ஈடுபட முடியாமல் போனமையை விடவும், நாடு இன்று எதிர்கொள்ளும் நெருக்கடியை நினைத்தே நான் கவலைப்படுகின்றேன். ராஜபக்ஷ குடும்பம் அரசியலில் நிராகரிக்கப்பட்டதற்காக நான் வருத்தப்படவில்லை. ஆனால் இந்நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள நிலையை எண்ணி நான் மனப்பூர்வமாக வருந்துகிறேன் என முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2




O/L பரீட்சைக்கு தோற்றிய

## 75 சதவீதமான மாணவர்கள் உயர்தரத்துக்கு தகுதி

### 'டொப் 10' அறிவிப்பு இம்முறை இல்லை

கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றிய மாணவர்களில் 75 சதவீதமான மாணவர்கள் கல்வி பொதுத் தராதர உயர்தரத்துக்கு தகுதியடைந்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ருஹுணு கல்வியியல் கல்லூரியில் தாக்குதல்

### 14 பேர் வைத்தியசாலையில் அனுமதி



காலி, அக்மீமனவில் உள்ள ருஹுணு தேசிய கல்வியியல் கல்லூரி விடுதியில் இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்த 14 பேர், கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

ஒரு வாரத்துக்குள்

## முட்டை ஒன்றின் விற்பனை விலையை அறிவிக்க வேண்டும்

### அரசாங்க நிதி பற்றிய குழு பணிப்பு



கோழிகளுக்கான உணவுகளை இந்நாட்டுக்கு இறக்குமதி செய்வது தொடர்பில் 1969 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை கருத்தில் கொள்ளும் போது, தற்போதைய விலைக்கு அமைய முட்டை ஒன்றை விற்பனை செய்யக்கூடிய சரியான விலையை ஒரு வாரத்துக்குள் வழங்குமாறு அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவால் நிதி மற்றும் வர்த்தக அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## பால்மா இறக்குமதி 50% வீழ்ச்சி



டொலர் பிரச்சினை உள்ளிட்ட பல காரணிகளால் பால்மா இறக்குமதி 50% குறைந்துள்ளதாகத் தெரிவித்த வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, பால்மா இறக்குமதிக்காக இறக்குமதியாளர்களுக்கு சில டொலர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தது.

தொடர்ச்சி P2

## பெரிய வெங்காய விலைக்கு நிவாரணம்



விசேட வர்த்தக பொருட்களுக்கான வரி விகிதத்தை குறைப்பதற்கு உணவு கொள்கைகள் குழு கடந்த 24ஆம் திகதி கூடிய போது பரிந்துரை செய்தது. அதற்கமைய, சந்தையில் பெரிய வெங்காயத்தை விலைக்கு வாங்குவதை அதிகரிப்பதற்கும் அதன் விலையை குறைப்பதற்கும் ஏதுவாக அமைந்தது.

தொடர்ச்சி P2

## ஏப்ரல் அல்லது மேயில் சாதாரண தர பரீட்சை

2022ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சை, ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத ஆரம்பத்தில் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, நேற்று (27) தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

பல்கலைக்கழகங்களில்

## கற்றல் காலம் முடிந்தால் வெளியேற வேண்டும்

### தங்கியிருந்தால் நடவடிக்கை

தமது கற்றல் கால எல்லையை கடந்த 05 சதவீதமான மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்குள் தங்கியிருப்பதாகவும் அவ்வாறான மாணவர்களுக்கு எதிராக, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அனைத்து துணை வேந்தர்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

ஈஸ்டர் தாக்குதல் குறித்து

## உள்ளக மற்றும் சர்வதேச விசாரணை நடத்தப்படும்



■ நீர்கொழும்பு நிருபர் எம். இஸட். ஷாஜஹான்

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான உண்மையை வெளிக்கொணர, உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் வெளிப்படையான விசாரணை நடத்தப்படும் என கர்தினால்களுக்கு எழுத்துமூலமான வாக்குறுதியை வழங்கியதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

லிட்ரோ


## எரிவாயு சிலிண்டர் விநியோகம் வரையறுப்பு

எதிர்வரும் 30ஆம் திகதி வரை வரையறுக்கப்பட்ட அளவிலான சமையல் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்க தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ள லிட்ரோ நிறுவனம், டிசெம்பர் முதலாம் திகதி முதல் 1 இலட்சம் சிலிண்டர்களை நாளாந்தம் சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக தெரிவித்தது.

தொடர்ச்சி P2




# டீசலை இறக்கும் பணிகள் ஆரம்பம்



சீன அரசால் நன்கொடையாக வழங்கப்பட்ட 10.6 மில்லியன் லீற்றர் டீசலை ஏற்றிக்கொண்டு 'சுப்பர் ஈஸ்டன்' என்ற சீனக்கப்பல் சனிக்கிழமை (26) காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த நிலையில், டீசலை இறக்கும் பணிகள் நேற்று (27) ஆரம்பிக்கப்பட்டன. விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான நன்கொடையாக சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு இந்த டீசல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்காலத்தில் விவசாயிகள், மீனவர்களுக்கு உரிய டீசல் வழங்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த தெரிவித்தார்.



## மாவீரர் நாள் அனுஷ்டிப்பு

வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில், வவுனியாவில் மாவீரர் மற்றும் போராளி குடும்பங்கள் கலந்துகொண்ட 2022ஆம் ஆண்டுக்கான தமிழீழ தேசிய மாவீரர் எழுச்சிநாள், வவுனியா நகரசபை மண்டபத்தில் உணர்வுபூர்வமாக நேற்று (27) அனுஷ்டிக்கப்பட்டது.

க. அகரன்

PAGE 1 தொடர்ச்சிகள்

# தீர்வை பெற்றுவிடலாமென ஜனாதிபதி நம்புகின்றார்

தமிழ், முஸ்லிம் தலைமைகள் கொள்கைவாத கோஷங்களை புறந்தள்ளி, யதார்த்தபூர்வமாக பக்குவமாக கையாண்டால், தெற்கிலுள்ள சிங்களவர்களும் நியாயமானது என்று நம்புகின்ற அளவுக்கு அதிகபட்ச அதிகாரப் பகிர்வை அடைந்துகொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபையின் ஏற்பாட்டில், 'தவிசாளர் விருது' வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (26) ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

> **இந்த நாட்டிலுள்ள மக்கள் இன ரீதியாக பிரிந்துகொண்டு வாழ்வது, அரசியல்வாதிகளின் போலியான பித்தலாட்டமே என பெரும்பான்மை சமூகத்தினர் உணர்ந்துள்ளனர். இந்தச் சூழ்நிலையை சாதசமாகப் பயன்படுத்தி, தமிழ், முஸ்லிம் தலைமைகள், கொள்கைவாத கோஷங்களை புறந்தள்ளி, யதார்த்தபூர்வமாக, பக்குவமாக கையாண்டால், தெற்கிலுள்ள சிங்களவர்களும் நியாயமானது என்று நம்புகின்ற அளவுக்கு அதிகபட்ச அதிகாரப் பகிர்வை அடைந்து கொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகும்**

தெற்கிலுள்ள சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில், இனப்பிரச்சினையை மூலதனமாக வைத்து உசுப்பேற்றும் பித்தலாட்ட அரசியல் செய்வதற்கான இடைவெளி குறைந்துவிட்டதன் காரணமாக, இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் விடயத்தை ஜனாதிபதி தற்போது முன்னெடுத்துள்ளார். இதனை தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகள் இலாவகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெரும்பான்மை சமூகத்துக்கு மத்தியிலுள்ள தேசியவாதிகள் மீது இன்னும் சந்தேகம் உள்ளது. பாராளுமன்றத்தில் மீண்டும் கூச்சலிடலாமா என முயன்று பார்க்கிறார்கள். ஆனால், அவர்களின் கருத்துகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

இந்த நாட்டிலுள்ள மக்கள் இன ரீதியாக பிரிந்துகொண்டு வாழ்வது, அரசியல்வாதிகளின் போலியான பித்தலாட்டமே என பெரும்பான்மை சமூகத்தினர் உணர்ந்துள்ளனர். இந்த நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்து, இலாபகரமாக பயன்படுத்தி நாட்டை சூறையாடியவர்கள், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் பொறுப்புதாரிகள் என இளைஞர்கள் நம்புகிறார்கள்.

இந்த நாட்டிலுள்ள பெரும்பான்மையான மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இந்தச் சூழ்நிலையை சாதசமாகப் பயன்படுத்தி, இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுவிட முடியும் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது. தமிழ், முஸ்லிம் தலைமைகள், கொள்கைவாத கோஷங்களை புறந்தள்ளி, யதார்த்தபூர்வமாக, பக்குவமாக கையாண்டால் தெற்கிலுள்ள சிங்களவர்களும் நியாயமானது என்று நம்புகின்ற அளவுக்கு அதிகபட்ச அதிகாரப் பகிர்வை அடைந்து கொள்வதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் உருவாகும்.

அதேபோல், தமிழ், முஸ்லிம் மக்களிடையே பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. இவற்றையும் நாம் பேசித் தீர்க்க முடியும். எமது பிரச்சினைகளுக்குள்ளே மற்றவர்கள் தலையீடு செய்வதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க கூடாது

# 75 சதவீதமான மாணவர்கள் உயர்தரத்துக்கு தகுதி

மேலும், சாதாரணத் தரத்தில் கணிதப் பாடத்தில் சித்தியடையாது ஐந்து பாடங்களில் மாத்திரம் சித்தியடைந்த மாணர்வகளும் உயர்தரத்துக்கு தகுதியைப் பெற்றுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முதன்முறையாக உயர்தரப் பரீட்சைக்கு 311,321 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இதில் 231,982 பேர் உயர்தரத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

பரீட்சைக்கு தோற்றிய 10,863 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளதாகவும், வழமையான உயர் தரப் பாடங்களை தெரிவு செய்வதற்குப் பதிலாக உலகுக்குப் பொருந்தும் வகையில் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளக்கூடிய பொருத்தமான பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரச தொழில்களை பெற்றுக்கொள்வது எதிர்காலத்தில் சிரமமானதாக இருக்கும். இதனால் ஆங்கிலம், தொழில்நுட்பப் பாடங்களை அடிப்படையாகக் கொண்ட பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

நாடளாவிய ரீதியில் முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவர்களின் பெயர்ப் பட்டியலை, பரீட்சைகள் திணைக்களம் வெளியிடப்போவதில்லை. சாதாரண தரப் பரீட்சையில் எந்தவிதமானப் போட்டிகளும் இல்லை. அதனால் முதல் 10 இடங்களைப் பிடித்த மாணவர்களை அடையாளம் காண்பதற்கு அவசியம் இல்லை எனவும் கூறினார்.

## ஏப்ரல் அல்லது மேயில் சாதாரண தர பரீட்சை

உயர்தரப் பரீட்சை சுமார் ஒன்றரை மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், சாதாரண பரீட்சையை ஏப்ரல் மாத இறுதியில் அல்லது மே மாத ஆரம்பத்தில் நடத்த வேண்டும் என அமைச்சர் குறிப்பிட்டார். அதேவேளை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை டிசெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளதால் அதற்கும் தயாராக வேண்டும் என்று தெரிவித்த அவர், பரீட்சைகள் சரியான நேரத்தில் நடத்தப்படும் என்று எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

மேலும், சீருடைகள் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், டிசெம்பர் 3ஆம் வாரத்தில் முதல் தொகுதி சீருடைகள் கிடைக்கப்பெறும் என்றும் 70%மான சீருடைகள் சீனாவில் இருந்து பெறப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார். அத்துடன், புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்களில் விலையைக் குறைக்கும் நோக்கில் அவை குறித்த செஸ் வரியை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவையில் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## கற்றல் காலம் முடிந்தால் வெளியேற வேண்டும்

இது சட்டவிரோத செயல் என்று தெரிவித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க, மேற்குறிப்பிட்ட பணிப்புரையை விடுத்துள்ளார்.

தமது கற்றல் கால எல்லைக்குள் பட்டப்படிப்பை நிறைவு செய்யாத மாணவர்கள், பல்கலைக்கழகங்களில் தங்கியிருக்க முடியாது. பட்டப்படிப்பை முடிப்பதற்கு 3 வருடங்கள் அவகாசம் வழங்கப்படுகின்ற போதிலும் அவ்வாறான மாணவர்கள், பல்கலைக்கழகத்தில் தங்கியிருப்பதால் செலவீனங்கள் அதிகரிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். பல்கலைக்கழகத்துக்குள் நுழையும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் காலப்பகுதியில் கற்பித்தல், விடுதிகள், நீர், மின்சாரம், கற்பித்தல் போன்ற வசதிகளை அரசாங்கம் வழங்குவதாக அவர் குறிப்பிட்டார். எனவே, தமது கால எல்லைக்குள் பட்டப்படிப்பை நிறைவு செய்யாவிடின், அவற்றுக்கான செலவீனங்களை அவர்களே பொறுப்பெடுக்க வேண்டும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

# மக்களை நினைத்தே வருந்துகிறேன்

எனினும் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த, வெளிநாட்டு கையிருப்பை அதிகரிக்க, கடனை படிப்படியாக அடைக்க, நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படாமல் இருக்க, நமது ஏற்றுமதியை அதிகரிக்கவும் என பல்வேறு திட்டங்கள் எம்மிடம் இருந்தன. எனினும் நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால, இதில் கோட்டாபய ராஜபக்ஷ தவறு செய்யவில்லை. கோட்டாபய ராஜபக்ஷவின் தவறு என்ன? அவர் சிறந்த திட்டங்களையே முன்னெடுத்தார். அதேபோல் நாம் பதவி ஆசை பிடித்தவர்கள் அல்ல. நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல, தாராளமாக இடம் கொடுத்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ருஹுணு கல்வியியல் கல்லூரியில் தாக்குதல்

சனிக்கிழமை (26) இரவு நடத்தப்பட்ட தாக்குதலில், விடுதியில் தங்கியிருக்கும் இரண்டாம் வருட மாணவர்களே காயமடைந்துள்ளனர். கல்லூரியில் முன்னர் கல்வி பயின்றவர்களும் தற்போது பயிற்சி ஆசிரியர்களாக பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள குழுவினரும் திடீரென விடுதிக்கு வந்து தாக்கியதாக காயமடைந்த மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 40 பேர் வரை விடுதிக்கு வந்து, விடுதிக்கு வந்த பயிற்சியாளர்கள், புதிய மாணவர்களின் அலைலைபேசிகளை பெற்றுக்கொண்டு தாக்குல் நடத்த ஆரம்பித்ததாக அங்குள்ள மாணவர்கள் தெரிவித்தனர். குறித்த குழுவினர், கல்லூரி விடுதியின் வேலியை உடைத்து உள்ளே நுழைந்ததாக ருஹுணு விஞ்ஞான பீடத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்த போதும் இது தொடர்பில் இதுவரை எவ்வித முறைப்பாடும் கிடைக்கப்பெறவில்லை என அக்மீமன பொலிஸார் தெரிவித்தனர்

# முட்டைஒன்றின் விற்பனை விலையை அறிவிக்க வேண்டும்

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று, குறித்த ஒழுங்குவிதி தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதனை அடுத்து 2022.05.10 திகதியிலான 2300/12, 2022.05.06 திகதியிலான 2278/21, 2022.06.24 திகதியிலான 2285/19, 2022.10.21 திகதியிலான 2302/31 ஆகிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிக்களுக்கு அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

## எரிவாயு சிலிண்டர் விநியோகம் வரையறுப்பு

விநியோகிக்கப்பட்டதாகவும் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. பண்டிகைக் காலங்களில் அதிக கேள்வி இருப்பதாலும், முற்பதிவு செய்யப்பட்ட எரிவாயுவை நாட்டுக்கு வருவதில் ஏற்பட்ட தாமதமும், வரையறுக்கப்பட்ட விநியோகத்துக்கு காரணம் என்று நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார். 4,000 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று எதிர்வரும் 30ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அதைத் தரையிறக்கிய பின்னர், விநியோகம் வழமைக்குத் திரும்பும் என்றும் அவர் குறிப்பிட்டார். பண்டிகை காலத்தை முன்னிட்டு டிசெம்பர் மாதத்தில் 34,000 மெற்றிக்தொன் சமையல் எரிவாயுவுக்கான முற்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனவரி வரை கப்பல்கள் தொடர்ந்து வருகைதரும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பால்மா இறக்குமதி 50% வீழ்ச்சி

4 இலட்சம் கிலோ கிராம் பால்மா அடங்கிய 17 கொள்கலன்கள் கடந்த ஒருமாதத்துக்கும் மேல் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதாக, பால்மா இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி லக்ஷ்மன் விஜேசூரிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இறக்குமதி செய்யப்பட்ட பால் மாவை சுங்கத்திலிருந்து விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை சுங்கம் மறுத்துள்ளது.

அந்நிய செலாவணியை சட்டவிரோதமாக கையாள்கின்றமை குறித்து பால்மா நிறுவனங்கள் தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் தற்போதும் முன்னெடுக்கப்படுவதாகவும் விசாரணையை சீர்குலைக்கும் நோக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு வருவதாகவும் சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கப்பலில் பால்மாவை ஏற்றும் போது ஒரு சட்டமும், நடுக்கடலில் பயணிக்கும் போது மற்றொரு சட்டமும், கொழும்பு துறைமுகத்தை கப்பல் நெருங்கியதும் மற்றுமொரு சட்டமும் அமல்படுத்தப்படுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக லக்ஷ்மன் விஜேசூரிய சுட்டிக்காட்டியிருந்தார்.

கொள்கலன்களை விடுவிப்பதற்கு அமைச்சு அனுமதி வழங்கியுள்ள போதிலும், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் மற்றும் சுங்கத் திணைக்களத்தினர் பால்மா கொள்கலன்களை விடுவிக்க மறுப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

# உள்ளக மற்றும் சர்வதேச விசாரணை நடத்தப்படும்

ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் நீர்கொழும்பு, அலியாப்பொல பிரதேசத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீண்டும் ஒரு பொதுப் போராட்டம் வந்தால், அவசரகாலச் சட்டத்தையும் இராணுவத்தையும் பயன்படுத்தி தோற்கடிப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு வழங்கிய மனித உரிமைகளை மீற முயன்றால், இலட்சக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி அந்த முயற்சிகளை முறியடிப்பார்கள். இலங்கை பிரஜைகள் கோழைகளாக இருக்கத் தயாரில்லை. தாங்கள் தைரியசாலிகள் என்று பாராளுமன்றத்திற்குள் தம்பட்டம் அடிப்பதை நிறுத்திவிட்டு, இவர்கள் மக்களிடம் செல்ல வேண்டும்.

அடுத்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு நிச்சயமாக மக்கள் ஆணை கிடைக்கும் எனவும், இந்த அரசாங்கத்திற்கு எதிரான ஒரே தீர்வு எமது கூட்டணியே எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

இந்த கூட்டத்தில் காவிந்த ஜயவர்தன, பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, முஜிபுர் ரஹ்மான், திஸ்ஸ அத்தநாயக்க உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

# இலங்கைக்கு 6ஆம் இடம்

இலங்கையில் உணவு பணவீக்கம் 86 சதவீதமாக உள்ளதுடன், கடந்த ஒகஸ்ட் மாதம் வெளியான அறிக்கையில் இலங்கை 5ஆவது இடத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

321 சதவீத உணவு பணவீக்கத்துடன் சிம்பாப்வே முதலாம் இடத்திலும் முறையே 208 மற்றும் 158 சதவீத பணவீக்கத்துடன் லெபனான், வெனிசுவேலா ஆகிய நாடுகள் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களிலும் உள்ளன. 99 சதவீத பணவீக்கத்தைக் கொண்டுள்ள துருக்கி ஐந்தாம் இடத்திலும் 87 சதவீத பணவீக்கத்தை கொண்டுள்ள ஆர்ஜன்டீனா ஆறாம் இடத்திலும் உள்ளதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

7ஆம் 8ஆம் 9ஆம் 10ஆம் இடங்களை முறையே ஈரான், ருவாண்டா, சுரினாம், லாவோஸ் ஆகியவை பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் நிலவிய உரத்தட்டுப்பாடு காரணமாக 40 முதல் 50 சதவீதமான விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன், பொருட்களை இறக்குமதி செய்வதற்கான டொலர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் உலகவங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் இலங்கையின் முதன்மை பணவீக்கம் 70.6% ஆக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அண்மையில் அறிவித்தது.

செப்டெம்பர் மாதத்தில் 73.7 சதவீதமாக உயர்ந்து காணப்பட்ட பணவீக்கம் ஒக்டோபர் மாதத்தில் 70.6 சதவீதமாக குறைந்துள்ளதாக திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பெரிய வெங்காய விலைக்கு நிவாரணம்

வெங்காயத்துக்கான மொத்த தேவை ஆண்டுக்கு சுமார் 300,000 மெட்ரிக் தொன்னாகும். அத்தேவையானது முக்கியமாக (86%) இறக்குமதி மூலமே நிறைவேற்றப்படுகின்றது. அதன்படி வெங்காயத்தின் தன்னிறைவு விகிதம் ஓர் ஆண்டுக்கான தேவையில் 14% சதவீதமாகும்.

நவம்பர் மாத மூன்றாவது வாரம் அளவில், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் சில்லறை விலை 290- 390 ரூபாயாகும். அதேவேளை, உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை ஒரு கிலோ கிராம் 340 தொடக்கம் 400 ரூபாயாக காணப்பட்டது. நவம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் வெங்காயத்தின் சராசரி விலை (CIF விகிதம்) 95.30 ரூபாயாக காணப்பட்டதோடு 2022 ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் அதன் விலைக்கு இணைந்ததாக சாதாரண அதிகரிப்பை மாத்திரமே காட்டியது.

> **ஒகஸ்ட் மாதத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் CIF விகிதம் மிகக் குறைந்தளவே அதிகரித்துள்ளது**

2022 வருடம் செப்டெ ம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் அரசாங்கம் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயத்துக்கு குறிப்பிட்ட விசேட வர்த்தகப் பொருட்களுக்கான வரியை 10 ரூபாய் தொடக்கம் 50 ரூபாய் வரை அதிகரித்தது. அதனை தொடர்ந்து பெரிய வெங்காய இறக்குமதி பெருமளவு குறைந்தது. ஒகஸ்ட் மாதத்தில் 27,889 மெட்ரிக் தொன்னாகக் காணப்பட்ட இறக்குமதி, நவம்பர் மாதம் ( மூன்றாவது வாரமளவில்) 13,496 மெட்ரிக் தொன்னாக வீழ்ச்சி அடைந்தது. இந்த வீழ்ச்சியால் ஒகஸ்ட் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் 175 ரூபாயிலிருந்து 328 ரூபாய் வரை அதிகரிக்க காரணமாக அமைந்தது. எவ்வாறாயினும் நவம்பர் 22 ஆம் திகதியிலிருந்து ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் விலை 250 ரூபாய் வரை வீழ்ச்சியை காட்டியுள்ள போதும், விசேட வர்த்தக பொருட்களுக்கான வரி விகிதம் அதிகரிப்பதற்கான காலப்பகுதிக்கு இணைந்ததாக அதன் விலையிலும் அதிகரிப்பைக் காணமுடிகின்றது. ஒகஸ்ட் மாதத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்தின் CIF விகிதம் மிகக் குறைந்தளவே அதிகரித்துள்ளபோதும் இத்திடீர் விலையேற்றத்துக்கு காரணம் செப்டெம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட வர்த்தக பொருள்களுக்கான வரி விகித அதிகரிப்பேயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ‘கோட்டாகோ ஹோம்’ பட்டியை நானே முதலில் அணிந்தேன்


■ பாலித ஆரியவங்கஷ

ஐக்கிய மக்கள் சக்தியை நானே உருவாக்கினேன் என தெரிவிக்கும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் ஆதரவளிக்கவில்லை என்றால், நாடு தற்போதிருக்கும் நிலையில் இருந்திருக்காது எனவும் தெரிவித்தார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், கோட்டா கோஹோம் என கறுப்புப் பட்டியை அணிந்துகொண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக சென்று நானே போராட்டத்தில் ஈடுபட்டேன். ஆனால், இப்பிரச்சினை பெரிதாகி நாடு வீழும் நிலைக்கு சென்றதைப் பார்க்கும்போது எனது மனசாட்சியும், தன்மானமும் உருத்தியது.

என்னால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினையால் நாடு நாசமடைந்ததாக எனக்கு தோன்றியது. எனக்கு எனது அரசியல் முக்கியமில்லை. அதற்கு அப்பால் நாட்டில் இருப்பதற்கான ஒருநிலைமையை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் அரசாங்கத்தில் இணைந்துகொண்டேன் எனவும் தெரிவித்தார்.

மூன்று மாதங்களுக்கு முன்பு, வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறது என்கிற நம்பிக்கை இழக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் இந்த சவாலை ஏற்றுக்கொண்டிருந்தேன். நான் அமைச்சுப் பதவியை ஏற்கும்போது, இலங்கையின் இரண்டு மில்லியன் காணிகளை நாட்டு மக்களிடம்கையளிக்கும் பாரிய பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி என்னிடம் கூறினார்.



ஆனால், காணி அமைச்சுக்கோ அல்லது காணி திணைக்களத்துக்கோ அல்லது காணி மறுசிரமைப்பு ஆணைக்குழுவுக்கோ செல்லும்போது மக்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். கால்கள் நோகுமளவுக்கு இந்நிறுவனங்களுக்கு மக்கள் சென்று வந்திருக்கிறார்கள். நாட்டின் காணிகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவான புரிதல் இருக்கிறது. இந்த அமைச்சை எனக்கு ஜனாதிபதி வழங்கும்போது காணிகளை எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பது தொடர்பான சட்டத்தை ஜனாதிபதி தயாரித்து கொண்டிருந்தார். அமைச்சர் என்ற வகையில் நான் விரும்பியபடி காணியை என்னால் பகிர்ந்தளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் அதிகளவானோர் விவசாய நிலங்களை தங்களது அதிகாரங்களைப் பயன்படுத்தி பெற்றுகொள்கிறார்கள். ஆனால் அந்த விவசாய நிலங்களில் ஒருபோதும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டதில்லை. இந்த முறைமை மாற்றப்பட வேண்டும். இதனை நான் எதிர்க்கிறேன் எனவும் கூறினார். காணிகள் தொடர்பான முறையான தரவுகள் இல்லை. இவ்வாறான நிலையில் முதலீட்டாளர்களுக்கு காணிகளை வழங்குவதில் நடைமுறைச் சிக்கல் காணப்படுகிறது. எனவே இம்முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி என்னால் அமைக்கப்பட்ட கட்சி. நானே சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக்கினேன். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் ஆதரவளிக்கவில்லை என்றால் நாடு இப்போதிருக்கும் நிலைக்கு வந்திருக்காது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நாடு முன்னோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது எனவும் தெரிவித்தார்.

## ரணிலை நாங்களே ஜனாதிபதியாக்கினோம்



ரணில் விக்கிரமசிங்கவை நாமே ஜனாதிபதியாக்கினோம் என தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத், ரணில் ஜனாதிபதியாவதற்கு ஹரின் பெர்ணான்டோ, நிமல் சிறிபாலடி சில்வா, அரவிந்த குமார், தெனிபிடிய, சாமர சம்பத்தே காரணம் எனவும் தெரிவித்தார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி, பிரதமராவதற்கு முன்னர் அவர் தொடர்பில் நானே பேசினேன். முதலில் மாங்காய் மரத்துக்கு நானே கல்லை எறிந்தேன். அதனை யாரும் மறுக்க முடியாது. இதற்கு முன்னர் நாம் ஒருபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவி செய்ததோ அல்லது அவருக்கு ஆதரவளித்ததோ இல்லை. நாட்டை வழமைக்குக் கொண்டுவந்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. பாராளுமன்றத்துக்கு தனியொரு நபராக வந்து பின்னர் பிரதமர், ஜனாதிபதியுமாகி பாராளுமன்றத்தில் 134 எம்.பிகளின் ஆதரவையும் பெற முடிந்துள்ளது எனவும் தெரிவித்தார்.

இதற்கு ஹரின் பெர்ணான்டோ, நிமல் சிறிபாலடி சில்வா, அரவிந்த குமார், தெனிபிடிய, சாமர சம்பத் ஆகியோரே காரணம் எனவும், நாம் அனைவரும் ஒன்றிணைந்தே ஜனாதிபதி ரணிலுக்கு 134 எம்.பிகளின் ஆதரவைப் பெற்றுக்கொடுத்து அவரை ஜனாதிபதியாக்கினோம். எமக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்கள் இருந்தாலும் நாட்டுக்காக எடுக்க வேண்டிய சரியான தீர்மானங்களை எடுத்தோம் என்றார். தற்போது எங்களை கட்சியிலிருந்து நீக்கியுள்ளதோடு எமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகிறார்கள் எனவும் தெரிவித்தார்.



அனுமதிப்பத்திரம் இல்லாது

## சீட்டாட்டத் தொழில் முன்னெடுக்கப்படுகின்றது

2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவின் கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் அபிவிருத்திக்கு வினைத்திறனான வகையில் தயாரிக்கப்பட்டதன் பின்னர் இதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் கருத்தில் கொள்வது பொருத்தமானது என குழு உறுப்பினர்களின் கருத்தாக இருந்தது. சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை இல்லாமை காரணமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பிலும் இதன்போது குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. உலகில் எந்தவொரு நாட்டிலும் சீட்டாட்டத் தொழில் ஒழுங்குபடுத்தும் நிறுவனமொன்று இல்லாமல் சீட்டாட்டத் தொழிலுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை என குழுவின் தலைவர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதுவரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்தப்படும் வரித்தொகைக்கு மேலதிகமாக சீட்டாட்டத் தொழில் தொடர்பில் செயற்படுவதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை எனவும் அதன் ஆரம்ப கட்டமாக இந்த அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இந்த சீட்டாட்டத் தொழிலுடன் தொடர்புடைய வரி செலுத்தப்படுகின்றதா, அதன் மூலம் எவ்வளவு வரிகள் அரசுக்கு அறவிடப்பட்டுள்ளது அல்லது இல்லை என்பது தொடர்பில் புரிதலொன்று இல்லாமை, பதிவு செய்யப்பட்டுள்ள 4 சீட்டாட்ட தொழில்களுக்கு மேலதிகமாக நடத்தப்படும் சீட்டாட்ட தொழில் தொடர்பில் முறையான ஒழுங்குபடுத்தல் இல்லாமை உள்ளிட்ட அதனுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குழுவில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, இது தொடர்பில் ஒப்பீடு ஆய்வொன்றை மேற்கொண்டு மீண்டும் கருத்தில் கொள்ள அரசங்க நிதி பற்றிய குழு தீர்மானித்தது.

நாட்டைக் கட்டியெழுப்ப

## ரணிலால் மட்டுமே முடியும்

பயங்கரவாத போராட்டக்காரர்களுக்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம, சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடி இலங்கையை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணிலால் மாத்திரமே முடியும் எனவும் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க திறமையானவர். ஆனால் அவருக்கு நாட்டு மக்களிடம் நல்ல வரவேற்பில்லை. அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடி நாட்டைக் கட்டியெழுப்ப ரணிலால் முடியும். எதிர்கால பரம்பரைக்காக ரணிலுக்கு ஆதரவளிக்க வேணடும்



எனவும் தெரிவித்தார்.

நானும் குற்றவாளிதான். நாட்டின் இந்நிலைமைக்கு நானும் பொறுப்புக்கூற வேண்டும். கள்ளர்களை ஆதரித்ததும் குற்றம் என்றே கருதப்படும். அத்தோடு திருட்டில் சிறியது, பெரியது என்றெல்லாம் பார்க்க முடியாது. திருட்டுத் திருட்டுத்தான். எனவே இதில் நானும் குற்றவாளிதான் எனவும் தெரிவித்தார்.

நாட்டிலிருந்து கொள்ளையடித்தவர்களின் நிதி உள்நாட்டில் இல்லை. அந்தப் பணங்கள் எல்லாம் வெளிநாடுகளில் தான் இருக்கின்றன. அந்த பணங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. இந்த வங்கிகளிலேயே கறுப்புப் பணங்கள் இருக்கின்றன. என்னிடம் கறுப்புப் பணங்கள் இல்லை. என்னிடம் சொத்துகள் இருக்கின்றன எனவும் தெரிவித்தார். பயங்கரவாத போராட்டக்காரர்களையே ரணில் வீதிக்கு இறங்க வேண்டாம் என்கிறார். பொதுமக்களை வீதிக்கு இறங்க வேண்டாமென ரணில் கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

இலங்கை ஊடகவியல் கல்லூரி மாணவிகளுக்கு

## டிஜிட்டல் பாதுகாப்பு பயிற்சிப்பட்டறை



இன்டர் நியுஸ் ஸ்ரீலங்கா பாதுகாப்பான சகோதரகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டுவரும் டிஜிட்டல் பாதுகாப்பு செயலமர்வு, இலங்கை ஊடகவியல் கல்லூரியின் மாணவிகளுக்கு நடத்தப்பட்டது.

இணையப் பாவனையின் போது குறிப்பாக பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள், இணையப் பாவனையை பாதுகாப்பான செயற்பாடாக மாற்றிக்கொள்ளும் வழிமுறை, டிஜிட்டல் பாதுகாப்பினை இலகுபடுத்தல், பாதுகாப்பான தொடர்பாடல் செயலிகளை தெரிவுசெய்தல் போன்றவிடயங்கள் இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இலங்கை ஊடகவியல் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்த செயலமர்விற்கான வழிகாட்டல், ஆலோசனை, முழுமையான நிதிபங்களிப்பு போன்றவற்றை இன்டர்நியுஸ் ஸ்ரீலங்கா வழங்கியது. இதனைஅ ரோவ்எயிட்நிறுவனம்ஒ ருங்கிணைத்திருந்தது டன், இந்தச் செயலமர்வின் வளவாளராக இன்டர் நியுஸ் ஸ்ரீலங்கா பாதுகாப்பான சகோதரிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் புலமைப்பரிசில்தாரியும், ஊடகவியலாளருமான கலாவர்ஷ்னி கனகரட்ணம் கலந்துகொண்டார்.

**விற்பனைக்கு**

41/45 Adjustable ஆசனங்களுடன் கூடிய, TV / DVD / AC பொருத்தப்பட்ட மற்றும் புதிய டயர்களுடன் கூடிய சிறந்த தரத்திலுள்ள Mitubishi Fuso பஸ் விற்பனைக்குண்டு, விலை ரூபா. 110 லட்சம் (NF - xxxx). தொடர்புக்கு: 076 1394858


கொழும்பில்

## சர்வதேச பலஸ்தீன ஒருமைப்பாட்டு தின கருத்தரங்கு

சர்வதேச பலஸ்தீன் ஒருமைப்பாட்டு தினம் வருடாந்தம் நவம்பர் மாதம் 29 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கம் கொழும்பில் கருத்தரங்கு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பலஸ்தீனுக்கு நீதி எனும் தொனிப் பொருளில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்திலுள்ள சர்வதேச கற்கைகளுக்கான பண்டாரநாயக்க நிலையத்தின் ஒலிம்பஸ் மண்டபத்தில் நவம்பவர் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு இக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் இலங்கைக்கான




பலஸ்தீன தூதுவர் கலாநிதி சுஹைர் ஹம்தல்லா சைத், வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி ஹனா சிங்கர், சர்வதேச உறவுகள் தொடர்பான நிபுணர் குசும் விஜேதிலக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர். இலங்கை பலஸ்தீன் ஒருமைப்பாட்டு இயக்கத்தின் செயலாளர் பௌசர் பாரூக் நன்றியுரை நிகழ்த்துவார். இந் நிகழ்வில் சகலரையும் கலந்து கொண்டு பலஸ்தீன விடுதலைக்காக குரல் கொடுக்குமாறு ஏற்பாட்டுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாதம் தொடர்பில் பாடமெடுக்கும்

## அமைச்சர் டிரான் அலஸ் பொருளாதார பயங்கரவாதி

வசந்த முதலிகே, சிறிதம்ம தேரரை பயங்கரவாதிகள் எனக் கூறும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஒரு பொருளாதாரப் பயங்கரவாதி என தெரிவித்த முன்னிலை சோசலிஷ கட்சியின் கல்விச் செயலாளர் புபுத ஜயகொடி, கைது செய்யுமளவுக்கு டிரான் அலஸ் பல குற்றங்களைப் புரிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு மாத்திரமல்லாது, ஒட்டுமொத்த நாட்டு மக்களையும் அச்சுறுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியிருக்கிறார். ஜனாதிபதி சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றையும் அச்சுறுத்தும் வகையில் உரையாற்றியிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

தலையீடுகளை மேற்கொள்ள வேண்டாமென மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ரணில் கூறுகிறார். உண்மையில் மனித உரிமைகள் மீறப்படும் போது தலையீடுகளை மேற்கொள்ளவே மனித உரிமைகள் ஆணைக்குழு இருக்கிறது எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சிறிதம்ம தேரர், வசந்த முதலிகே ஆகியோருக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு



அமைச்சர் டிரான் அலஸ் கூறுகிறார். ஆனால் சட்டமா அதிபர் திணைக்களம் சிறிதம்ம தேரருக்கு பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பில்லை என கூறுகிறது எனவும் தெரிவித்தார்.

டிரான் அலஸ் யார் என எமக்கு தெரியும். 2007 மே 30ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழே கைது செய்தார்கள். கைது செய்யப்படும் அளவுக்கு டிரான் அலஸ் மீது பல குற்றச்சாட்டுகள் காணப்படுகின்றன எனவும் தெரிவித்தார். டிரான் அலஸ் என்பவர் பொருளாதாரப் பயங்கரவாதி. இவர் தான் பயங்கரவாதம் தொடர்பில் எமக்குப் பாடமெடுக்கிறார். சட்டவிரோதமான உத்தரவுகளை எதிர்க்கும் பொலிஸ் அதிகாரிகளையும் பாராளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி டிரான் அலஸ் அச்சுறுத்தி வருகிறார் எனவும் தெரிவித்தார்.

## நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்

நாடுமுழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் 13,200 கைதிகளையே அடைக்க முடியும் என்றாலும், தற்போது அந்த எண்ணிகை இரு மடங்காகியுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

சில சிறைச்சாலைகளின் கொள்ளளவு 300 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறுக் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்து அதிகரித்து வந்துள்ளதாகவும், நாடுமுழுவதிலும் சுமார் 26 ஆயிரம் கைதிகள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் உள்ள 74 சதவீதமானவர்கள் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களின் கீழ் கடந்த வருடம் கைது செய்யப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலையில் உள்ள பெரும்பாலான கைதிகளில் 62 சதவீதமானவர்கள் சந்தேகநபர்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் எனவும், சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் போதைப்பொருள் குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள் பாவிக்கும் மாணவனை வீட்டுக்கு அனுப்பக்கூடாது

## சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் பிரணவன்

■ என். ராஜ்



போதைப்பொருள் பாவனை உடைய மாணவனை, பாடசாலையிலிருந்து பாடசாலை விலகல் கடிதத்தை கொடுத்து அனுப்பக்கூடாது என்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி டொக்டர் பிரணவன் தெரிவித்தார். யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போதைப்பொருள் பாவனை தடுப்பு கூட்டத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாடசாலைகளில் போதைப்பொருள் பாவணையுடன் தொடர்பட்ட மாணவர்களை அடையாளம் காணும்போது, அந்த மாணவர்களை உடனடியாக பாடசாலையிலிருந்து பாடசாலை விலகல் கடிதத்தை கொடுத்து அனுப்புவது தொடர்பில் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே அவ்வாறு போதைப்பொருள் பாவனை உடைய மாணவனை வீட்டுக்கு அனுப்பினால், அவர் வீட்டுக்கு சென்று கட்டாயமாக போதைப்பொருளைத் தொடர்ச்சியாகப் பாவிப்பார். அதை விடுத்து விட்டு, அவ்வாறு இனம் காணப்படும் மாணவர்களை பாடசாலையிலிருந்து இடைநிறுத்தாது, அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பிவைக்க வேண்டும். குறிப்பாக மனித உரிமை ஆணைக்குழு மற்றும் ஏனைய அமைப்புகள் இந்த விடயம் தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

### மன்னார் கல்வி வலயத்தில்

# 39 மாணவர்கள் 9ஏ சித்தி

■ மன்னார் நிருபர்

வெள்ளிக்கிழமை (25) வெளியாகிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், மன்னார் கல்வி வலயத்தில் 39 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

அதற்கு அமைவாக, புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் 15 பேரும் சித்திவிநாயகர் இந்து தேசிய பாடசாலையில் எட்டு பேரும் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் ஏழு பேரும் பேசாலை பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தில் நான்கு பேரும் வங்காலை சென் ஆன்ஸ் பாடசாலையில் இரண்டு பேரும் நானாட்டான் டிலாசால் கல்லூரியில் இரண்டு பேரும் அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் ஒருவரும் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்கள்.



### ஒட்டுசுட்டான் விமானக்குண்டு வீச்சில்

# படுகொலை செய்யப்பட்டர்களுக்கு நினைவஞ்சலி

■ செ. கீதாஞ்சன்

ஒட்டுசுட்டானில் 1990ஆம்ஆண்டு, நவம்பர் மாதம், 27ஆம் திகதி, விமானக் குண்டுத் தாக்குதலில் 12 பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்டனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களின் 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்று (27) நடைபெற்றது.

உறவுகள் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில், ஒட்டுசுட்டான் சிவன் கோவிலுக்கு முன்பாக இந்நிகழ்வு நடைபெற்றது. இந்தப் படுகொலைச் சம்பவத்தின் போது, தந்தையையும் சகோதரரையும் இழந்த கண்ணன் என்பவர் பொதுச்சுடரை ஏற்றிவைத்ததுடன், படுகொலைச் சம்பவத்தில் மரணித்தவர்களின், உறவினர்கள் மற்றும் இந்நிகழ்வில் கலந்துகொண்டவர்களால் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



### மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில்

# உணவுப் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்

■ செ. கீதாஞ்சன்

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான ஒருங்கிணைந்த பொறிமுறையின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் வியாழக்கிழமை (24) நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கிராமிய புத்தெழுச்சி குழுவின் கலந்துரையாடல், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் இரு பிரிவுகளாக இடம்பெற்றது. காலையில் கொல்லவிளாங்குளம் பொது நோக்கு மண்டபத்திலும், பிற்பகல் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் அலுவலகத்திலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ந. ரஞ்சனா ஏற்பாட்டில், மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலதாதன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில், தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது, சத்துணவைப் பெற்றுக் கொடுக்கும் வழிமுறைகள், வறுமையிலும் பட்டினியாலும் வாடும் குடும்பங்களை மீட்டெடுப்பது, சிறுவர்களின் போசாக்கு, பாடசாலை இடைவிலகலைத் தவிர்த்தல் முதலான முக்கியமாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.



### விரைவாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதால் தான்

# மீள்குடியேற்றங்களை துரிதப்படுத்த முடிந்தது

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் விரைவாக கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதால்தான், மீள்குடியேற்றங்களை துரிதப்படுத்த கூடியதாக இருந்தது என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கலோ ரஸ் நிறுவனத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா, வியாழக்கிழமை (24) கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், மக்களின் மீள் குடியேற்றத்துக்கும் வாழ்வாதார நடவடிக்கைகளை மிக விரைவாக முன்னெடுப்பதற்கும் விரைவுபடுத்தப்பட்ட வெடிபொருள் அகற்றலே உதவியாக அமைந்தது. அதற்காக உழைத்துக் கொண்டிருக்கும் மேற்படி நிறுவனத்துக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பணிகளுக்கு 40 வீதமான பெண்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பது பாராட்டத்திற்குரியது. வெடிபொருட்கள் அகற்றும் பணிகளில் ஈடுபட்டு கொண்டிருக்கும்போது பலர் காயமடைந்திருப்பதையும் பலர் உயிர்களைத் தியாகம் செய்திருப்பதையும் அறிகின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் இராணுவ உயரதிகாரிகள், விமானப் படையினர், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, உயர்நிலை அதிகாரிகள், கலோரஸ் நிறுவனத்தின் பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

### கல்முனை, சம்மாந்துறை வலயங்களில்

# மாணவர்கள் வரலாற்றுச் சாதனை

■ வி.ரி சகாதேவராஜா

இம்முறை வெளியான க.பொ.த.சா. தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, கல்முனை வலயத்தில் 106 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று, சாதனை படைத்துள்ளதாக கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றி இருந்த 2,815 மாணவர்களில், 41 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தி பெறத் தவறி இருக்கின்றார்கள். மொத்தமாக 78சதவீத மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள். அதிகூடிய 96% சித்தி மற்றும் அதிகூடிய 32 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்ற பாடசாலையாக கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி திகழ்கின்றது. அடுத்தபடியாக 17 மாணவிகள் 9ஏ சித்திகளுடன் மகுமூத் மகளிர் கல்லூரியும், 9 மாணவர்கள் 9ஏ சித்திகளுடன் காரைதீவு இ.கி.சங்க பெண்கள் பாடசாலையும் முன்னணியில் உள்ளன.

சம்மாந்துறை வலயத்தில் முதல் தடவையாக 44 மாணவர்கள் 9ஏ சித்திகளைப் பெற்றுள்ளார்கள் என்று சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் . அமீர் தெரிவித்தார்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் 30 மாணவர்கள் 9ஏ சித்திகளையும் நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நான்கு மாணவர்களும், சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நான்கு மாணவர்களும் 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர். இதேவேளை, 25 மாணவர்கள் சகல பாடங்களிலும் சித்தியின்மையைப் பெற்றிருக்கிறார்கள்.



# புதிய தலைவராக பதவியேற்பு

■ வி.ரி சகாதேவராஜா

கல்முனை றோட்டரிக் கழகத்தின் 22 ஆவது தலைவராக, நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கல்லாறு நிலைய பொறுப்பதிகாரி றோட்டரியன் விஜயரெத்தினம் விஜயசாந்தன் நேற்று (27) பதவிப் பிரமாணம் செய்தார். புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினது பதவியேற்பு வைபவம், காரைதீவு லேடி லங்கா மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மாவட்ட றோட்டரி ஆளுநர் றோட்டரியன் புவுது டி சொய்சாயும் கௌரவ அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜனும் கலந்து சிறப்பித்தார்கள்.

கல்முனை றோட்டரிக் கழகத்தின் புதிய செயலாளராக றோட்டரியன் கே.குகதாஸன், புதிய பொருளாளராக றோட்டரியன் எம்.சிவபாத சுந்தரம் ஆகியோரும் பதவியேற்றார்கள்.



# வாழைச்சேனை ஆயிஷாவுக்கு புத்தகங்கள்

■ எச்.எம்.எம் பர்ஸான்

வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு வெள்ளிக்கிழமை (25) ஒரு தொகை புத்தகங்கள் வழங்கப்பட்டன. கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை, கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை பிரதேச செயலக கலாசார பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ். திலீபா, ஜே. ரதிதேவி ஆகியோர், பாடசாலை அதிபர் என். சஹாப்தீன், பிரதி அதிபர் ஏ.ஆர். முகைதீன் பாவா, நூலக ஆசிரியர் எம்.ஐ.சபீக், பகுதித் தலைவர் எம்.எல்.எம். முஸம்மில் ஆகியோரிடம் கையளித்திருந்தனர்.



# கசிப்பு தயாரிப்பு, கடத்தலுடன் தொடர்புபட்ட 07 பேர் கைது

■ கனகராசா சரவணன்

மகிளூர், நாகபுரம் பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி ஈடுபட்ட மற்றும் காஞ்சரம்குடாவில் இருந்து களுவாஞ்சிக்குடிக்கு கசிப்பு கடத்தலில் ஈடுபட்ட சம்பவங்களில் இரு பெண்கள் உட்பட 7 பேரை சனிக்கிழமை (26) பொலிஸார் கைது செய்ததுடன் பெருமளவிலான கசிப்பு, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள், மோட்டர்சைக்கிள்கள் மூன்று என்பன மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை, காஞ்சரம்குடா பகுதியில் இருந்து களுவாஞ்சிக்குடி பகுதிக்கு இரண்டு மோட்டர் சைக்கிளில் சுமார் 40 லீற்றர் கசிப்பை எடுத்துச் சென்ற நிலையில், பழுகாமம் பகுதியில் வைத்து மூன்று பேரைக் கைது செய்ததுடன் கசிப்பு மற்றும் இரண்டு மோட்டர்சைக்கிள்களை மீட்டனர்.

இதனை தொடர்ந்து, மகிளூர், நாகபுரம் பகுதிகளில், வீடுகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று வீடுகளை முற்றுகையிட்டு, ஒரு பெண் உட்பட மூன்று பேரைக் கைது செய்ததுடன் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களையும் கைப்பற்றினர்.

அதேவேளை, பழுகாமம் பகுதியில் இருந்து களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக்கு மோட்டர்சைக்கிளில் கசிப்பு கடத்திய ஒருவரை பட்டிருப்பு பொலிஸ் சோதனைசாவடியில் வைத்து கைது செய்துள்ளதுடன் அவ்வாறே கசிப்பு கடத்தலில் ஈடுபட்ட பெண் ஒருவரையும் கைது செய்தனர்.



# குறுந்திரைப்படம் வெளியீடு

■ நூருல் ஹுதா உமர்

சமூகத்தின் பிரச்சினைகளையும் ஒழுக்க சீர்கேடுகளையும் மக்களுக்கு எடுத்துரைத்து சமூக மாற்றத்தை நோக்கி நகர்த்தும் முகமாக, அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் கலைஞர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்த 'சமூக விழிப்புணர்வு குறுந்திரைப்படம்' வெள்ளிக்கிழமை (25) சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய மண்டபத்தில் திரையிடப்பட்டது.

எல்.எம். சாஜித் இயக்கத்தில் டொப் குயின் அட்வர்டைசிங் நிறுவன தயாரிப்பில் பிரபல கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் பிரதான நடிப்பில் வெளிவந்த இந்தக் குறுந்திரைப்படம், 'முதல் தொழுகை', 'பணத்திமிரு', 'பெண்தேவதை', 'குடிபோதை', 'வட்டியின் வினை' போன்ற சிறிய பகுதிகளாக பிரிக்கப்பட்டு திரையிடப்பட்டன.

மருதம் கலைக்கூடல் மன்றம், தெரு பசங்க தயாரிப்பு நிறுவனம் போன்றவற்றின் இணைத்தயாரிப்பில் வெளிவந்த இந்தக் குறுந்திரைப்பட வெளியீட்டில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் டீ.எம். ரின்ஸான் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# களுதாவளையில் போட்டிகள்

■ வ. சக்தி



சுவாமி விவவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் செய்து 125ஆவது ஆண்டை முன்னிட்டு, களுதாவளை இந்து மாமன்றத்தின் ஏற்பட்டில், களுதாவளையில் செயற்பட்டுவரும் எட்டு அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றது.

'சுவாமி விவேகானந்தரின் வீர மொழிகள்' எனும் தலைப்பிலான போட்டி, ஞாயிற்றுக்கிழமை (27) களுதாவளை ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில், களுதாவளை இந்து மாமன்றத்தின் தலைவர் ப. குணசேகரனின் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டும் மாணவர்களுக்கு டிசெம்ர் 11 ஆம் திகதி களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படுவர்.

போதை மாத்திரைகளை விற்ற

# மருந்தகம் சுற்றிவளைப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து, மாத்தளை, பல்லேபொல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த போதைப் பொருள் வர்த்தக நிலையம், சுற்றிவளைக்கப்பட்டதென மாத்தளை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மருந்தகம் ஒன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டதுடன், இதன்போது 17 பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த சுமார் 520 மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் சில காலமாக இந்தப் போதைப்பொருட்களை விற்பனை செய்து வருவதாகவும் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் ஒரு மாத்திரையின் விலை நூறு ரூபாய் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக சந்தேக நபர் மஹவெல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கொட்டகலை பிரதேச சபையில் ஊழல்

## பாராளுமன்றத்தில் வெளிப்படுத்திய இராதா எம்.பி

கொட்டகலை பிரதேச சபையில் ஊழல் இடம்பெறுவதாகவும் காணிகளை பெருந்தொகையில் விற்பதாகவும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்ற விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கொட்டகலை பிரதேச சபையின் செயலாளர் சரத் விக்ரமசிங்ஹ ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஆயினும் மத்திய மாகாணத்தில் தனக்கிருக்கும் செல்வாக்கை பயன்படுத்தி, கொட்டகலை பிரதேச சபையின் செயலாளராக ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகிறார்.



கொட்டகலை பிரதேச சபையின் காணிகளை தலைவருடன் சேர்ந்து சட்டதிற்கு புறம்பாக பாரிய தொகைகளை பெற்று, தனது சகாக்களுக்கு கொடுத்து வருகின்றார். குறிப்பாக டெவன் நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடத்தில் பல ஏக்கர் காணியை ஒருவருக்கு பெற்றுக்கொடுப்பதற்காக பாரிய தொகையை இலஞ்சமாக பெற்று பிரதேச சபையின் ஆட்சேபனை இல்லை எனவும் கடிதத்தை வழங்கியுள்ளார்.

அத்தோடு ஆர்கில் பிரதேசத்தில் பொதுமக்களின் தேவைக்காக சபைக்கு வழங்கப்பட்ட காணியை 33 வருட குத்தகைக்கு பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது. அதற்கு அந்த பிரதேச மக்களின் எதிர்ப்புகள் இருந்த போதும் அதனை சட்டத்திற்கு புறம்பாக செய்து வருகின்றார்.

இவ்வாறு ஊழல்களை செய்வதற்கு சபை தவிசாளரும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார். அத்தோடு நாட்டின் பொருளாதார பிரச்சினையால் ஒப்பந்த அடிப்படையில் எவரையும் சேவையில் அமர்த்த வேண்டாமென அரசினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போதும் அதை மீறி செயற்படுகின்ற இவருக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

நுவரெலியா மாநகர சபை தொழிலாளர் சங்கத்தின்

# முதலாவது தேசிய சம்மேளனம்



■ ஆ.ரமேஸ்

நுவரெலியா மாநகர சபை தொழிலாளர் சங்கத்தின் முதலாவது தேசிய சம்மேளனம், நுவரெலியா மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

நாட்டில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் தொழிலாளர்களை பிரதநிதித்துவம் படுத்தும் எட்டுக்கு அதிகமான முற்போக்கு தொழிற்சங்கங்களின் தலைமைகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தேங்காய் பறிக்கச் சென்ற இளைஞன்

# மின்வேலியில் சிக்கி மரணம்

■ ஷேன் செனவிரத்ன

மகாவலி வனப்பகுதிக்குள் தேங்காய் பறிப்பதற்காகச் சென்ற இளைஞன், மின்கம்பியில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பல்லேகல பகுதியில் பதிவாகியுள்ளது.

இரவு உணவை தயாரிப்பதற்காக தேங்காய் பறிக்கச் சென்ற இளைஞனே பாதுகாப்பற்ற மின்வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

25ஆம் திகதி இரவு உணவுக்காக தேங்காய் பறிப்பதற்காக தனது சகோதரியுடன் வீட்டிற்கு அருகில் உள்ள மகாவலி வனப்பகுதிக்குள் சென்ற போதே, அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பல்லேகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மரக்கட்டையால் தாக்கி சிறிய தந்தை கொலை

■ ராமு தனராஜா

பதுளை, வெவெஸ்த்தை தோட்டம் சேர்ந்த 60 வயதுடைய நபர், அவரது மகனால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

29 வயதுடைய வாய்பேசமுடியாத மகனே, 60 வயதான தந்தையை மரக்கட்டையால் தாக்கியுள்ளதுடன், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் (26) மாலை சுமார் 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதோடு, சந்தேகநபரும் நேற்று இரவு பதுளை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இளைஞரின் தந்தை பல வருடங்களுக்கு முன்னரே குறித்த இளைஞரையும் அவரது தாயையும் விட்டு பிரிந்து சென்றுள்ளதுடன், உயிரிழந்த நபர் தாயின் இரண்டாவது கணவர் என்றும் பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா ஸ்ரீ முத்துமாயம்மன் அறநெறிப் பாடசாலை

# அதி சிறந்த அறநெறி பாடசாலையாக தெரிவு



■ எஸ். கே. குமார்

புத்தசாசனம் மற்றும் காலாசார அலுவல்கள் அமைச்சு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இணைந்து, சிறந்த சேவையாற்றும் அறநெறி பாடசாலைகளைத் தெரிவு செய்து, இந்து சமய அறநெறிக்கல்வி தேசிய சேவை மேன்மை விருதுகளை வழங்கியது.

இதற்கமைய, நுவரெலியா ஸ்ரீ முத்துமாயம்மன் அறநெறிப்பாடசாலைக்கு அதி சிறந்த அறநெறிப் பாடசாலை விருது வழங்கப்பட்டது.

இந்த விருதினை இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் இடமிருந்து நுவரெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர் பெரியசாமி பெற்றுக்கொண்டார்.

# பல்லேகல பொலிஸாரின் சீருடை தீயில் எரிந்தது

■ ஷேன் செனவிரத்ன



பல்லேகல பொலிஸ் பயிற்சி கல்லூரியின் கட்டடத்தில் ஏற்பட்ட தீயால், 18 பொலிஸாரின் பொலிஸ் சீருடைகள் முழுமையாக எரிந்துள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர்.

50 அடி உயயரமான கட்டடமே தீபரவலுக்கு உள்ளாகிய நிலையில், தீயால் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார கசிவே தீ ஏற்பட்டமைக்கான காரணமாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ள பல்லேகல பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

சாதாரணதர பரீட்சை பெறுபேறுகளில்

# மெராயா பாடசாலை சாதனை

■ துவாரகஷான்



வெளியாகியுள்ள க.பொ.த சாதாரணப் பரீட்சை பெறுபேறுகள் அடிப்படையில் நுவரெலியா -கோட்டம் 03 மெராயா தமிழ் மகா வித்தியா லயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய 91 மாணவர்களில் 71 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்கான தகுதிகளைப் பெற்றுள்ளார்கள்.

இவர்களுள் நான்கு மாணவர்கள் 09A சித்தியினையும் ஒரு மாணவன் 08A 01c சித்தியையும் பெற்றுள்ளதுடன்,

ஏனைய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இதற்கமைய பழனியாண்டி ரொஷான், பாலகிருஸ்ணன் அபிஷான், பத்மநாதன் தர்ஷன், முரளீதரன் டிலக்ஷனா 9 ஏ சித்திகளையும், பிரபாகரன் டில்ஷான் 08 ஏ 1 சி பெறுபேற்றையும் பெற்றுள்ளார்.

# 100 கிலோ கிராம் இறைச்சியுடன் இருவர் கைது



■ ரஞ்சித் ராஜபக்ஷ

மாடுகளைக் கொன்று இறைச்சிக்காக விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்களை கம்பளை பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கண்டி, அக்குரணை பிரதேசத்தில் வசிக்கும் சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன்தினம் (26) கண்டி பிரதேசத்தில் அதிசொகுசு காரொன்றை வாடகைக்குப் பெற்று, நாவலப்பிட்டிக்கு வந்துள்ளனர்.

பின்னர் நாவலப்பிட்டி-பூண்டுலோயா வீதிக்கு அருகிலுள்ள வனப்பகுதியில் புல்மேய்ந்த மாட்டைக் கொன்று இறைச்சியாக்கிய போது, கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சந்தேகநபர்களின் காருக்குள் இருந்து 100 கிலோ கிராம் இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்காக நாவலப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிலும் மாணவர்களுக்கு

# இலவச தலைக்கவசம் வழங்கப்பட்டது

■ டிசுந்ரு

நுவரெலியாவில் மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கப்பட்டது .

'எமது பிள்ளைகள் பெறுமதியானவர்கள்' என்ற தொனிப்பொருளின் கீழ் நுவரெலியா பிரதேசத்தின் தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கு பெற்றோருடன், மோட்டார் சைக்கிளில் பாடசாலைகளுக்கு தலைக்கவசம் இன்றி செல்லும் மாணவர்களுக்கு இவ்வாறு தலைக்கவசம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் (27) நுவரெலியா பொலிஸ் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பொலிஸ் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி ஆகியோர் இணைந்து மாணவர்களுக்கு இலவசமாக தலைக்கவசம் வழங்கினர்.



மாணவர்களின் பெயர் விவரங்களை திரட்டி, தனியார் காப்புறுதி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் குறித்த தலைக்கவசங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், தலைக்கவசத்தின் பயன்பாடு மற்றும் தலைக்கவசம் குறித்த விழிப்புணர்வுகளும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலின்

# நிர்வாக பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டது

■ ஆ.ரமேஸ்

உடப்புஸ்ஸலாவை, சென் மார்க்கிரட் தோட்ட ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம் தொடர்பாக எழுந்திருந்த நிர்வாக பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டது.

இந்த ஆலயத்தின் நிர்வாகம் தொடர்பில், சென் மார்கிரட் தோட்ட மக்களுக்கும் இடைக்கால நிர்வாகத்தில் உள்வாங்கப்பட்ட உடப்புஸ்ஸலாவை நகர வர்த்தகர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தின் தற்போதைய செயற்பாடுகள்,நிர்வாகம் தொடர்பில் உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலையத்தில் மூன்று முறைப்பாடுகளும் பதிவிடப்பட்டுள்ள நிலையில், குறித்த முறைப்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் அண்மையில் பொது கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உடப்புஸ்ஸலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எ.டி.வசந்த தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் ஆலயம் தொடர்பாக நிர்வாக பிரச்சினை உள்பட புனருத்தாபன பிரச்சினை, நிதி பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் வாதவிவாதங்கள் இடம்பெற்றன.

இந்த நிலையில் வருகை தந்திருந்த அதிகாரிகள் மக்களின் நியாயமான கருத்துக்களை கேட்டறிந்து ஆலயத்திற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்து, ஆலயம் தொடர்பான பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வை வழங்கியுள்ளனர்.

மேலும் 20 உறுப்பினர்கள் கொண்ட புதிய நிர்வாகம் வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டதுடன், இதில் நகர வர்த்தகர்களும் உள்வாங்கப்பட்டுள்ளனர்.



# பிள்ளைகளால் கைவிடப்பட்ட தாய்

## ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்ட தாய் ஒருவர், ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி, பெரலுகஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 65 வயது தாயொவர், தனது பிள்ளைகளுடன் சிவனொளிபாதமலைக்கு வருகை தந்திருந்த நிலையில், பிள்ளைகள் இவரை விட்டுச் சென்றதால் ஹட்டன் நகருக்கு தனியாக வந்து, காமினிபுரி பகுதியில் விழுந்து கிடந்த நிலையில், பிரதேசவாசிகளால் ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த தாய் பொலிஸாரிடம் வழங்கிய தகவலுக்கமைய, அவரது உறவினர்கள் குறித்து நாவலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.



இதுவரை தாயைப் பொறுப்பேற்க எவரும் வருகைத் தராத நிலையில், அவர் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளார்.

# இலங்கைக்கு நத்தார் பரிசு கிடைக்குமா?

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் நிதி உதவி டிசெம்பர் மாதத்தில் கிடைக்கத்தவறினால், மீண்டும் மார்ச் மாதம் வரை காத்திருக்க வேண்டிய நிலை எழுந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார். இலங்கைக்கு நிதி, கடன் வசதிகளை வழங்கியவர்களுடன் மீளச் செலுத்துவது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானமொன்றை எய்தக்கூடியதாக இருக்குமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இந்தத் தீர்மானம் எய்தத் தவறினால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவிகளை இந்த வருட இறுதிக்குள் பெற்றுக் கொள்ளக்கூடிய கால எல்லையை தவறவிடுவதாக அமைந்திருக்கும். 2023 மார்ச் மாதம் வரை சர்வதேச நாணய நிதிய கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு காத்திருக்க வேண்டும். இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை, எட்டு சமமான தவணைகளில் வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம்இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. நிலைபேறற்ற தேசிய கடன் மட்டங்களில், பொறுப்பற்ற வகையில் மேற்கொண்டிருந்த கடன் பெறுகைகள் மற்றும் நிதித் தீர்மானங்கள் போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. இலங்கை கடந்த காலங்களில் தொடர்ச்சியாக பெற்றுக் கொண்ட கடன்களின் தவணைகளை தவறாமல் மீளச் செலுத்தி வந்தமையாலும், சர்வதேச நிதி சந்தைகளுக்கு அணுகலின்றி இறக்குமதிகளை முன்னெடுத்திருந்தமையால், வங்கிக்கட்டமைப்பின் உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் பெறுமளவில் குறைந்திருந்தன. தேசத்தின் பாரிய பரஸ்பர கடன் வழங்குநரான சீனா, தாம் வழங்கிய கடனை மீளச் செலுத்துவது தொடர்பில் மீளக்கலந்துரையாடுவதில் பெருமளவு ஈடுபாட்டைக் காண்பிக்கவில்லை.

2022 டிசெம்பர் மாதத்துக்கு முன்னதாக எழுமாற்றான கடன்வழங்குநர் கட்டமைப்பை உருவாக்கவும், நிதி உத்தரவாதத்தை வழங்கவும், பாரிஸ் கிளப் போன்ற குழுக்கள் மற்றும் பரஸ்பர கடன் வழங்குநர்களுடன் இலங்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த வண்ணமுள்ளதுடன், சீனாவையும், இந்தியாவையும் இணைந்து கொள்ளுமாறும் வலியுறுத்தியிருந்தது.

சர்வதேச கடன் தரப்படுத்தல்கள் குறைவடைந்திருந்தமையால், 2020 ஆம் ஆண்டில் சர்வதேச கடன் வழங்கும் சந்தைகளுக்கான இலங்கை தனது அணுகலை இழந்திருந்தது. நெருக்கடி நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை இலங்கை நாடியிருந்தது, 2022 செப்டெம்பர் மாதத்தில், இலங்கை அரசாங்கமும், சர்வதேச நாணய நிதியமும், 48 மாத காலப்பகுதிக்கு, 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை நிதி வசதியை பெறுவதற்கான ஊழியர் மட்ட உடன்படிக்கைக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அதற்காக சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளை வித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச நாணய நிதியத்தால் நிதி உதவிகள் வழங்கப்படுவதற்கு முன்னதாக, கடன் நிலைபேறாண்மையை உறுதி செய்வதற்கு அரச கடன்வழங்குநர்கள் நிதி உத்தரவாதமளிப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதுடன், தீர்வு காண்பதற்கு அரசாங்கத்துடன் தனியார் கடன் வழங்குநர்கள் இணைந்து செயலாற்றுவதற்கான நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவையாகும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உழைப்பை விற்றுவாழ முடியாது. அதாவது, பிறர் சொல் கேட்டு, இருக்கும் தொழிலை நிராகரிப்பதுடன், அனுபவம் அற்ற விடயத்தில் நுளைவதும், தன்னைத்தானே இழப்பது போலாகும்.

இருக்கும் சொத்துகளை விற்று, சௌக்கியமாக வாழ்பவர்களும் இருக்கிறார்கள். எத்தனை காலம் இப்படி வாழ முடியும்?

கண்டபடி இழந்து, வரவை எதிர்பார்க்க முடியாது. தேகத்தையும் அறிவையும் நம்பி வாழ்வதே சிறப்பு. முதற்கண் சேமித்த பணம், சொத்து, கௌரவங்களைத் தொடர்ந்து பேணவேண்டும். இழப்பவர்களைச் சமூகம் கண்டுகொள்ளாது. இவர்களிடம் இருந்து விலகிவிடுவார்கள்.

வாழ்க்கையை துணிச்சலுடன் வாழத் தயாராகுங்கள். எதிர்பாராத மாற்றங்கள், யாவருக்கும் வரலாம். துன்ப நெருப்பைக் கடந்து செல்ல, துணிவை இயல்பாக்குவதே அறிவு.

செருக்குடன் வாழாதீர்கள்; மனிதர்களுடன் இணைந்து வாழுங்கள். அவரவர் வாழ்க்கைக்கு அவரவரே தலைவர்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அடிப்படை வசதிகள் இல்லாத செருக்கன் கிராமம்

கிளிநொச்சி, குஞ்சுப்பரந்தன் பிரதேசத்துக்கு உட்பட்ட செருக்கன் கிராமத்தில் வாழும் 40 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், குடிநீர் உட்பட தமக்கான அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் நீண்ட காலமாக, பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர். குறித்த கிராமத்தில் வாழும் குடும்பங்களில் 90 சதவீதமான குடும்பங்கள், கடற்றொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளன. இந்நிலையில் குறித்த கிராமத்திலிருந்து கடற்கரைக்கு செல்லும் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம், புனரமைக்கப்படாமையால், கடற்றொழிலுக்கு செல்வோர் தினமும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருதாக தெரிவித்துள்ளனர்.

இதனை விட, செருக்கன் கிராமத்தில் குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளபோதும், அவற்றுக்கான நிதியொதுக்கீடுகள் போதுமானதாக இல்லாத காரணத்தால் நிரந்தர வீடுகளில் அதிகளவானவை முழுமைப்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றன. அதிகளவான குடும்பங்கள் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக, தற்காலிக வீடுகளிலே வாழ்ந்துவருகின்றன. இவ்வாறு தற்காலிக வீடுகளில் வாழும் குடும்பங்கள் சொல்லொனானத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் குறிப்பிட்டசில காலங்களில், வீடுகளில் இருக்கமுடியாத நிலை ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமக்கான வீட்டுத்திட்டங்களை கோருகின்ற போதும், புள்ளியிடல் முறைகளில் உள்வாங்கப்படவில்லை அல்லது குறைந்த குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் என தாங்கள் விலக்கபபடுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பூநகரி - பரந்தன் வீதியில் போதிய போக்குவரத்து வசதிகள் இன்மை காரணமாக, பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள பிரதேச மக்கள் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரியுள்ளனர்.

– யது பாஸ்கரன்

உணவுப் பாதுகாப்பின்மை:

# மெதுவாக ஆரம்பிக்கும் பேரழிவை தடுத்தல்



சா.செ.ச இளங்கோவன்
(பன்மைத்துவத்துக்கான மக்களாட்சி ஒன்றியம்)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக, மக்கள் வருமானம் பெறும் வழிமுறைகள், குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன. இந்த நெருக்கடி நிலையானது, உணவு பெற்றுக்கொள்வதற்கும் பொருட்களை கொள்வனவு செய்வதற்குமான வசதிகளை குறைத்துள்ளது. இதனால், இலங்கை உணவுப் பாதுகாப்பின்மை அபாயத்தை எதிர்நோக்குகின்றது. குறிப்பாக, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களை, உணவுப் பாதுகாப்பின்மை பெரிதும் பாதிக்கின்றது.

வடக்கு, கிழக்கிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், போரால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள், வறுமைக்கோட்டுக்குள் இருப்பதால் அவர்களுக்கு சொத்துகள் இல்லை; காணிகள் போன்றன மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன.

குறிப்பாக, பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், முன்னாள் போராளிகள், பல்வேறு சாதி மற்றும் வர்க்க வேறுபாட்டால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் என்பன வளங்களை பெற்றுக்கொள்வதென்பது குறைவாகவே உள்ளது. நீண்டகால அழுத்தங்களால் பாதிக்கப்பட்ட குழுவுக்கு தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது அதிர்ச்சியானதாகவும் உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு, உற்பத்தி செலவு அதிகரிப்பு, உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு போன்ற சுமைகளையும் தாங்க வேண்டியுள்ளது.

அண்மையில், ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட இலங்கைக்கான மனிதாபிமான கோரிக்கையில், நாடாளவிய ரீதியில் 22 மில்லியன் மக்களில் ஐந்து மில்லியன் மக்கள் உணவு பாதுகாப்பின்மையை எதிர்நோக்குகின்றார்கள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆய்வறிக்கையில், யாழ்ப்பாண மாவட்டம், கிழக்கு மாகாணம் தேவையுள்ள அல்லது பாதிக்கப்பட்ட பிரதேசங்களாக முன்னுரிமைப்படுத்தப்படவில்லை. இதற்கு போருக்குப் பிந்தைய சமூகங்கள் மற்றும் மலையகம் பேரிடர்களை எதிர்கொள்வதில் அதிக வலிமையுடன் சமாளிக்கும் உத்திகளை உடையவர்களாக இருப்பதால் இவ் ஆய்வில் இம் மாவட்டங்களின் பாதிப்பு வெளிப்படுத்தப்படவில்லை. இருந்தபோதிலும் இச் சமூகங்களில் ஊட்டச்சத்தது, சுகாதாரம் மற்றும் கல்விநிலை ஆகியவற்றின் மீதான தாக்கம், தேசிய சராசரிக்கு குறைவானதாகவே இருக்கின்றது.

மெதுவாக ஆரம்பிக்கும் பேரழிவை தடுத்து நிறுத்துவதற்கான, தலையீடுகளை அறிமுகப்படுத்துவதற்காக, கௌரவமான நிவாரணம் வழங்கும் உணவு மற்றும் பண ஊதியத்துடனான வேலை உத்தரவாத் திட்டம், பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்திற்கூடாக மாணவர்களுக்கு நாளாந்தம் உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துதல், சிறு விவசாயிகளை ஊக்குவிப்பதற்கூடாக உள் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவித்தல், இவற்றை உடனடி நிவாரண நடவடிக்கைகளுடன் ஆரம்பித்து மீண்டும் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பி, நீண்ட காலத்தில் நிலையான வாழ்வாதாரத்திற்கு இட்டுச் செல்லல் வேண்டும்.

உணவு மற்றும் பணத்திற்கான வேலை உத்தரவாதத் திட்டம் என்பது, தற்போது அரசாங்கத்தால் வழங்கப்படும் சமூக பாதுகாப்பு (நலன்புரிகள்) போதுமானதாக இல்லாததுடன் பயனற்றதாகவும் உள்ளது. நாட்டில் பொது விநியோக முறைமை இல்லாதுள்ளது. அரசாங்கத்தின் வறுமை ஒழிப்பு திட்டத்தில் மாதாந்தம் 4,000 ரூபாயாக காணப்படுகின்றது. இந்தப் பணம், சமுர்த்தி நிவாரணம் பெறும் 4 பேருக்கு மேற்பட்ட குடும்பத்திற்கு போதுமானதாக இருக்குமா?

இதற்கு 70% கொடுப்பனவானது அரிசி, கோதுமை மா, பருப்பு, சீனி மற்றும் மண்ணெண்னை போன்ற பொருட்களாக வழங்கப்படலாம். மிகுதி 30% பணமாக வழங்கப்படலாம். உணவுப்பொருட்களுடன் இணைந்து வழங்கப்படும் பணமானது, ஒரு குடும்பத்தை தற்போதைய சூழ்நிலையிலிருந்து பாதுகாக்கும்.

குறைந்தது ஒரு மில்லியன் (இலங்கையின் ஏழ்மையான குடும்பங்கள் 15%) குடும்பங்களை தொடர்ச்சியாக இரண்டு ஆண்டுகளுக்கு இவ் உதவியானது வழங்கப்படல் வேண்டும். இது அவர்களின் உடல், உள, நல்வாழ்வுக்கு ஒரு கண்ணியமான வழியாகும். இச் செயற்பாட்டால் நாட்டில் 15% ஆன குடும்பங்களுக்கு உணவு வழங்கப்படுவதனூடாக சந்தைக்கான கேள்வியை குறைப்பதுடன் உணவுப் பொருட்களின் விலைகள் நியாயமான வரம்புக்குள் தக்கவைக்கப்படும்.

உற்பத்தியை அதிகரிப்பதற்கான இடைக்கால வேலைத்திட்டமாக, பிராந்திய சமூகங்களின் உணவு உற்பத்தியை உறுதிப்படுத்த இடைக்கால திட்டங்கள் தேவை. அந்நிய செலாவணி நெருக்கடியானது உணவுப்பொருட்களின் இறக்குமதியைக் குறைக்கின்றது. நீண்ட காலத்துக்கு உணவு உதவியை நம்பியிருக்க முடியாது. அதனால் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவி செய்ய வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் விவசாயிகள் கூடுதலான உற்பத்தியை செய்வதற்கும் அத்துடன் அவர்களுக்கு வரும் இடர்பாடுகள் மற்றும் அழிவுகளை எதிர்கொள்வதற்கான ஊக்குவிப்புகளை செய்தல் வேண்டும். உற்பத்தியில் ஏற்படுகின்ற அதிகரிப்பானது விலைகள் குறைவடைந்து பரந்த பொருளாதார சூழலை உறுதிப்படுத்தும். உற்பத்தியை அதிகரிப்பதற்கான இடைக்கால வேலைத்திட்டமாக மூன்று சாத்தியமான வழிகளில் இத்திட்டங்களை மேற்கொள்ளலாம்.

அ. மிகவும் வறுமைக்குட்பட்ட குடும்பங்கள் அவர்களுடைய வீட்டுத் தேவைகளுக்கு பயிரிடுதல்.

ஆ. சிறு விவசாயிகளின் உற்பத்தியை ஊக்குவித்தல் அல்லது இடர்கள் மற்றும் உற்பத்தி செலவைக் குறைப்பதன் மூலம் உற்பத்தியின் அளவைத் தக்கவைத்தல்.

இ. சமூக நிறுவனங்களுக்கு உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு உதவி செய்வதுடன் நுகர்வோருக்கு நியாயமான விலையில் வழங்குதல்.

வீட்டுப் பண்ணையானது உணவுப் பாதுகாப்பினை அதிகரிக்கும். வீட்டுத்தோட்டம் மற்றும் நாட்டுக் கோழி வளர்த்தலானது பணத்தில் தங்கியிருப்பதனை குறைக்கும். வீட்டில் புரதத்தினை பெற்றுக்கொள்ளும் பயிர்கள் மற்றும் கால்நடைகள் (மரக்கறி, தானியங்கள், கோழி) வளர்ப்பதன் மூலம் நிறைந்த உணவுச் சமநிலையை பேணுவதற்கு இது உதவி செய்யும். இது வருமானமீட்டும் செயற்றிட்டமாக கருதாமல் கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட உணவுகளின் மூலம் வீடு மற்றும் சமூகத்தின் தேவைக்கு உதவியாக இருத்தல். வீட்டுத் தோட்டத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கும் வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் தொழில்நுட்ப பயிற்சிகள் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடியதாக மாதிரி நாற்று மேடைகளை உருவாக்குதல் வேண்டும். விதைகளை மாத்திரம் வழங்குவது பொருத்தமானதல்ல.

வீட்டு உணவுப் பாதுகாப்புக்காக உற்பத்தியை அதிகரிப்பதற்கான நிதியுதவி அளித்தல். இந்தச் செயற்றிட்டத்தில் வியாபார நோக்கம் அல்லாத மற்றும் காணி உள்ள விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு நெல், 1 ஏக்கருக்கு தானியம் மற்றும் மரக்கறி பயிரிடுவதற்கு நிதியுதவி அளித்தல். உழுதல், விதைநெல் மற்றும் உரத்திற்கான நிதியாக 30,000 ரூபாய் மானியமாக வழங்கள். இந்த நடவடிக்கை உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் ஊட்டச்சத்தினையும் பெறக்கூடியதாகவிருக்கும்.

உற்பத்தியாளர்களுக்கு பொதுவிலுள்ள உழவு இயந்திரங்கள், மற்றும் விவசாய உபகரணங்கள் குறைந்த வாடகையில் கிடைப்பதனை ஊக்குவித்தல். மேலும் சிறு விவசாயிகள் கூட்டாக சேர்ந்து பயிரிடும் போது பாதுகாப்பிற்காக செலவிடும் நேரம், வன விலங்குகளால் குறிப்பாக யானைகளினால் ஏற்படுத்தப்படும் அழிவுகளைக் குறைக்கலாம்.

கிராமிய விவாசாய உற்பத்தியை தக்கவைத்தலும் அதிகரித்தலும் ஊடாக சிறு வியாபார நோக்கத்தை கொண்ட விவசாயிகளை ஊக்குவித்தல். 5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடும் விவசாயிகள் பொதுவாக சிறு விவசாயிகளாக கருதப்படுவர். இவர்கள் தமது சொந்த காணியிலோ அல்லது நீண்ட கால குத்தகைக்கு காணிகளை பெற்று பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்கள். ஆனால் இவர்களிடம் சொந்தமாக இயந்திரங்கள் காணப்படாமையினால் வாடகைக்கு எடுக்க வேண்டியுள்ளது. இந்த விவசாயிகள் அதிகரித்த உற்பத்தி செலவுகள் மற்றும் உரத் தட்டுப்பாடு காரணமாக பயிர்செய்கையை கைவிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. குறைந்த உற்பத்தி செலவில் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு பின்வரும் பரிந்துரை நடவடிக்கைகளை செயற்படுத்தலாம்.

அ) விவசாயி தமது சொந்த உணவுத் தேவையை பெற்றுக்கொள்வதற்கு விதை நெல், உழுதல், ஏக்கருக்கான உரம் ஆகியவற்றிற்கு ரூ45,000 ஐ மானியமாக வழங்குவது.

ஆ) வியாபார நோக்கத்திற்காக 4.5 ஏக்கருக்கு மேற்படி செலவுகளுக்கு ரூ135,000 காப்புறுதியையும் உள்ளடக்கி வழங்குதல்.

இவ்வாறான செயற்றிட்டத்தினை மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, தானியங்கள், மரக்கறிகளை பயிரிடுவதற்கான உற்பத்தி செலவுகளுக்கு மானியம் வழங்கல்.

அரசு மற்றும் அரசு சார்பாற்ற நிறுவனங்களிலுள்ள வளங்களை பயன்படுத்துதல். குறைந்த நிதி வளத்துடன் அரசாங்கம் தமது ஊழியர்களை கமநல சேவைகள் திணைக்களத்திலுள்ள உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கான எளிதாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சிறந்த திட்டமிடல் மற்றும் வளங்களை விவசாயிகள் பொதுவாக பயன்படுத்த சமூகமட்டத்தில் நிர்வகித்தல் என்பது ஒரு நிலைத்திருக்கும் நடவடிக்கையாக இருப்பதுடன் உற்பத்தி செலவையும் குறைக்கும்.

இலங்கையானது ஏராளமான நீர் மூலங்களை கொண்டுள்ளது. பலதரப்பட்ட நன்னீரில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களைக் கொண்டு தலைமுறை தோறும் சமூகங்களை நிலைத்திருக்க வைத்திருக்கின்றது. இருந்தபோதிலும் அதிகரித்த பாவனை மற்றும் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக இதன் உச்ச பயனை அடைய முடியவில்லை. இதன் பயன்பாடு தொடர்பான சிறந்த திட்டமிடலினை மீன்பிடி சமூகங்களுடன் இணைந்து செயற்படுத்துவதன் மூலம் மீன் விருத்தி அறுவடையை பெருக்கி உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுடன் சந்தை வழங்களையும் விலை நிர்ணயத்தினையும் ஏற்படுத்தலாம். உடனடி நடவடிக்கையாக மீன்குஞ்சுகளின் உற்பத்தியினை பெருக்கி தேவையானளவு அதன் இருப்பினை உறுதிசெய்தல்.

இதில் வழங்கப்பட்ட யோசனைகள் இலங்கையிலுள்ள தனிநபர்கள், குழுக்கள் அல்லது அரசு மக்களுக்கு உதவிகளை வழங்குவதை எளிதாக்குவதாகவும் நிவாரணங்களுக்கு அப்பால் கண்ணியம் நிலைத்திருக்கும் தன்மை மக்களின் மீட்சிக்கும் பங்களிக்கும்

யூனியன் அஷ்யூரன்ஸ்

# பான் ஏசியா வங்கி இடையிலான பாங்கசூரன்ஸ் உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது



யூனியன் அஷ்யூரன்ஸ், தமது பாங்கசூரன்ஸ் பங்காளரான பான் ஏசியா வங்கியுடனான வியாபார அறிமுகத்தை அண்மையில் கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தது. இலங்கையின் 1ல் தர பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநர் எனும் நிலையை உறுதி செய்து, யூனியன் அஷ்யூரன்ஸ், பான் ஏசியா வங்கியுடன் 2022 ஜுன் மாதம் பங்காண்மையை ஏற்படுத்தியிருந்தது. இதனூடாக நாட்டின் சகல பாகங்களுக்கும் காப்புறுதி சேவைகளை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இந்தப் பங்காண்மையினூடாக, பான் ஏசியா வங்கிக்கு, சேமிப்பு, பாதுகாப்பு மற்றும் முதலீடுகள் போன்றவற்றுக்கு ஆயுள் காப்புறுதி தீர்வுகள் அடங்கலாக பரந்தளவு நிதிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே மற்றும் பான் ஏசியா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி நளீன் எதிரிசிங்க ஆகியோர் இந்த வியாபார அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டதுடன், இரு நிறுவனங்களினதும் நிர்வாக அணியினர் பங்கேற்று, வாடிக்கையாளர்களுக்கு உயர் தரம் வாய்ந்த சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான பகிரப்பட்ட இலக்கை எய்த தயார்ப்படுத்துவதற்கு அவசியமான சிறந்த உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே கருத்துத் தெரிவிக்கையில், “கடந்த மூன்று தசாப்த காலமாக, இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுச் சேர்ப்பதில் எமது நிறுவனம் தம்மை அர்ப்பணித்துள்ளது. இன்று, இலங்கையில் பாங்கசூரன்ஸ் பிரிவில் நாம் முன்னோடிகளாகத் திகழ்கின்றோம். நாட்டிலுள்ள பெருமைக்குரிய நிதிச் சேவைகளை வழங்கும் வங்கிகளில் ஒன்றான பான் ஏசியா வங்கியுடனான எமது பங்காண்மையின் மூலமாக, நிறுவனத்துக்கு முக்கியமான மைல்கல்லை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எமது டிஜிட்டல் ஆற்றல்கள் மற்றும் பாங்கசூரன்ஸ் நிபுணத்துவம் போன்றவற்றுடன், பரிபூரண ஆயுள் காப்புறுதி தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக பான் ஏசியா வங்கியுடன் இணைந்து பணியாற்றுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.” என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “யூனியன் அஷ்யூரன்ஸில் நாம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலும் வாடிக்கையாளர்கள் மையப்படுத்தப்பட்டிருப்பார்கள். சிறந்த தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவதனூடாக, இலங்கையின் ஆயுள் காப்புறுதித் துறையில் டிஜிட்டல் மயமாக்கத்தில் நாம் முக்கிய பங்காற்றியுள்ளோம். சகல அம்சங்களையும் கொண்ட எமது மொபைல் app ஆன Clicklife, வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற டிஜிட்டல் அனுபவத்தை வழங்குகின்றது. இந்தப் பங்காண்மையின் பயனாக, பான் ஏசியா வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு, பெருமளவு Clicklife app உள்ளம்சங்களை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். இவற்றில், 85 க்கும் அதிகமான பங்காளர்களிடமிருந்து வெகுமதிகள் அடங்கியிருப்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது சுகாதாரம் மற்றும் நிதி ஆரோக்கிய நிலையை பேணுவதற்கு உதவியாக அமைந்த அம்சங்களும் காணப்படுகின்றன.” என்றார்.

பான் ஏசியா வங்கியின் உதவி பொது முகாமையாளர் (நுகர்வோர் கடன்) சியான் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், “சரியான பங்காண்மையினூடாக வியாபார வளர்ச்சி ஏற்படுத்தப்படுவதுடன், பரஸ்பர அனுகூலம் வாய்ந்த பெறுபெறுகளை எய்தக்கூடியதாகவும் இருக்கும். நிதி உள்ளடக்கம் மற்றும் உலகத் தரம் வாய்ந்த தீர்வுகள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில், 27 வருடங்களுக்கு மேலாக இலங்கைச் சமூகத்தாருக்கு எமது வங்கி சேவைகளை வழங்குகின்றது. நாம் பெற்றுக் கொண்ட பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச கௌரவிப்புகளினூடாக இது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. புகழ்பெற்ற மற்றும் நம்பிக்கை வாய்ந்த ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் கைகோர்த்து, எமது வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காக, உள்ளடக்கமான காப்புறுதிகளை வழங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். எமது வியாபாரத்துக்கு இந்தப் பங்காண்மை பயனளிப்பதாக அமைந்திருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், நவீன ஆயுள் காப்புறுதி தீர்வுகளுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளைப் பெற்றுக் கொடுக்க உதவியாக அமைந்திருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.” என்றார்.

# தேசிய சவால்களுக்கு அர்த்தமுள்ள தீர்வுகளை முன்னெடுப்பதற்கான ‘Dreamers’களை SLT-MOBITEL தெரிவு

‘Dreamers Wanted Programme’ எனும் நிகழ்ச்சியை SLT-MOBITEL முன்னெடுத்திருந்தது. இந்த நிகழ்ச்சியினூடாக, தூர நோக்குடைய சிந்தனையாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள், மதிநுட்பமானவர்கள் மற்றும் வழமைக்கு அப்பால் சிந்திப்பவர்கள் ஆகியோரிடமிருந்து, தேசிய சவால்களை வெற்றி கொள்வதற்கு புத்தாக்கமான சிந்தனைகளினூடாக தீர்வுகளை வெளிப்படுத்துமாறு கோரியிருந்தது.




தொழில்நுட்பத்தையும், சாதனங்களையும் புத்தாக்கமான வகையில் பயன்படுத்துவது தொடர்பில் வெற்றியாளர்கள் கவனம் செலுத்தியிருந்ததுடன், SLT-MOBITEL, இந்த தொழில்முயற்சியாண்மை சிந்தனைகளுக்கு அவர்களின் கனவுகளை நனவாக்கிட ஆதரவளிக்க முன்வந்துள்ளது.

இலங்கையின் உள்ளூராட்சி சபைகளில் பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் சம்பவங்களை அறிக்கையிடக் கூடிய பொதுக் கட்டமைப்பாக ManKiw இனால் app ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. SLT-MOBITEL இனால் சந்தைப்படுத்தல் ஊடாக வியாபார அபிவிருத்திச் யெசற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர் சென்றடைவை மேம்படுத்தவும் உதவிகள் வழங்கப்படும்.

நாட்டில் நிலைபேறான தீர்வுகளுக்கான தேவைகளை மீள உறுதி செய்யும் வகையில், Eco-Friendly Bricks திட்டத்தினூடாக, சூழலுக்கு நட்பான, சிவப்பு மண்ணைப் பயன்படுத்தி குறைந்த செலவிலமைந்த கட்டட மூலப்பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட திட்டம் மற்றுமொரு வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. வியாபார விரிவாக்கச் செயற்பாடுகளை உறுதி செய்வது மற்றும் வியாபார அபிவிருத்தி ஆதரவை வழங்குவது போன்றவற்றுக்கு SLT-MOBITEL இனால் உதவிகள் வழங்கப்படும்.

காற்றாலையினால் வலுவூட்டப்பட்ட மோட்டார்களைக் கொண்டு பண்ணைகளுக்கு நீர் இறைக்கும் தீர்வான Water Pumping Windmill திட்டமும் மற்றுமொரு ‘Dreamer’ தீர்வாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் வடிவமைப்பாளர்களை இணைக்கும் செயற்பாடுகளுக்கு SLT-MOBITEL இனால் ஆதரவளிக்கப்படும். சந்தைப்படுத்தல், வர்த்தகநாமமிடல் மற்றும் வாடிக்கையாளர்களை சென்றடைதல் போன்ற வியாபார விருத்திச் செயற்பாடுகளுக்கான ஆதரவும் ஏற்பாடு செய்யப்படும்.

Project Sakura திட்டத்தினால், குறைந்த வருமானமீட்டும் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு சகாயமான வலு மாற்றீடுகளை வழங்குவதாக அமைந்திருந்தது. இந்தத் திட்டம் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்தத் தீர்வில், குறைந்த செலவிலமைந்த ஒளிக் குழாயினால், சூரிய ஒளி கையகப்படுத்தப்பட்டு, மின்சாரத்தை வழங்குவதுடன், சிறிய மின்குமிழ்களுக்கு ஒளியூட்டுவதாக அமைந்துள்ளது. SLT-MOBITEL இனால், வியாபார அபிவிருத்தி மற்றும் நிதி ஆதரவு போன்றன இந்தத் திட்டத்தின் விரிவாக்கத்துக்கு வழங்கப்படும்.

SLT-MOBITEL அதிகாரிகள் மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்களின் கல்வி நிபுணர்கள் அடங்கலாக Dreamers Wanted மதிப்பாய்வு அணியினால் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் தூர நோக்குடைய விண்ணப்பங்களை இவர்கள் மீளாய்வு செய்து தெரிவு செய்திருந்தனர்.

SLT-MOBITEL இன் ‘Dreamers Wanted’ திட்டத்தை முன்னெடுப்பதை குழுமத்தின் ஆய்வு மற்றும் விருத்திப் பிரிவான ‘SLT-MOBITEL The Embryo’ மேற்கொண்டிருந்தது. SLT குழுமத்தினுள் காணப்படும் பெறுமதி வாய்ந்த அறிவு மற்றும் திறன்கள் ஆகியவற்றைக் கொண்டு, பன்னாழிகை புத்தாக்க கட்டமைப்பை கட்டியெழுப்புவதாகவும், அதனூடாக தேசத்துக்கு சேவையாற்றுவதில் பங்களிப்பு வழங்கும் வகையிலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளது. இதற்காக கல்விமான்கள், தொழிற்துறைகள், ஒன்றிணைப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் போன்ற பல தரப்புகளுடன் கைகோர்த்துள்ளது.

பிரதம கூட்டாண்மை மற்றும் புத்தாக்க அதிகாரி பிரபாத் அம்பேகொட கருத்துத் தெரிவிக்கையில், “தொழில்முயற்சியாளர்கள் மற்றும் ஆரம்பநிலையிலுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதற்கு SLT-MOBITEL தம்மை அர்ப்பணித்துள்ளதுடன், ஒருவருக்கொருவர் உதவக்கூடிய வழிமுறைகளை தொடர்ந்து இனங்கண்ட வண்ணமுள்ளது.

உத்திர பிரதேசம்

# 580 கிலோகிராம் கஞ்சாவை உட்கொண்ட எலிகள்

## பொலிஸார் குற்றச்சாட்டு




பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த 580 கிலோ கிராம் கஞ்சாவை எலிகள் உட்கொண்டுள்ளதாக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ள விநோத சம்பவம் உத்திர பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உத்திர பிரதேசத்தின் மதுரா நகரத்தில் உள்ள, ஹைவே மற்றும் ஷேர்கர் ஆகிய இரண்டு பொலிஸ் நிலையங்களிலும் வைக்கப்பட்டிருந்த சுமார் 60 லட்சம் மதிப்பிலான கஞ்சாப் பொதிகளையே இவ்வாறு எலிகள் உட்கொண்டு விட்டதாக மதுரா நீதிமன்றத்தில் பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நீதிபதி கஞ்சாப் பொதிகளை எலிகள் தான் உட்கொண்டுள்ளன என்பதற்கான ஆதாரத்தைக் காட்டுமாறு கேட்டுள்ளார்.

இதற்குப் பொலிஸார் தரப்பில் முறையான பதில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த நீதிபதி “ எலிகள்தான் கஞ்சாப் பொதிகளை உட்கொண்டு விட்டன என்ற கதையை வேறு எங்கேயாவது போய் கூறுங்கள், இன்னும் ஒரு வாரத்துக்குள் காணாமல் போன கஞ்சா மூட்டைகள் நீதிமன்றத்துக்கு வர வேண்டும். இல்லையென்றால் நடப்பதே வேறு" எனக் கூறியுள்ளார்.

இவ்வாறு காணாமல் போன பொருட்களுக்கு எலி மீது பழிபோடுவது இது முதன்முறை அல்ல. இதற்கு முன்னர் பீகாரில் பொலிஸார் சார்பில் பறிமுதல் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான லீற்றர் சாராயத்தை எலிகள் குடித்துவிட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



மத்திய பிரதேசம்

# காதலில் தோல்வி அடைந்தவர்களுக்குச் சிறப்புச் சலுகை

மத்திய பிரதேசத்தில், காதல் தோல்வியடைந்த இளைஞர் ஒருவர், தனது முன்னாள் காதலியின் நினைவாக ஒரு தேநீர் கடையொன்றை நடத்தி வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பி.ஏ இறுதியாண்டு படித்து வரும் குறித்த இளைஞர் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், உறவினரின் திருமண நிகழ்ச்சியொன்றில் ஒரு பெண்ணை சந்தித்துள்ளார்.

இருவரும் நண்பர்களாக பழகி வந்த நிலையில் நாளடைவில் காதலில் விழுந்துள்ளனர். இந்நிலையில் சுமார் 2 வருடங்களாக இருவரும் காதலித்து வந்துள்ள நிலையில் அப் பெண்ணுக்கு திடீரென வேறு ஒருவருடன் நிச்சயதார்த்தம் நடைபெற்றுள்ளது.

இதனால் மன உளைச்சலுக்கு உள்ளான குறித்த இளைஞர் இதில் இருந்து மீண்டு வரவேண்டும் என்பதற்காக கில்சிப்பூர் நகர் பஸ் நிலையம் அருகே அண்மையில் ஒரு தேநீர் கடையொன்றை ஆரம்பித்துள்ளார்.

காதல் தோல்வியடைந்தவர்களுக்கு சிறப்பு சலுகைகளையும் வழங்கி வருகிறார்.

மும்பை

# வீதியில் வியாபாரம் செய்யும் விராட் கோலி?




இந்திய அணியின் முன்னாள் தலைவரான, நட்சத்திர வீரர் விராட் கோலி இன்ஸ்டாகிராமில் அதிக பின்தொடர்பவர்களை வைத்திருக்கும் பிரபலங்களில் ஒருவராவார்.

இந்நிலையில் அண்மையில் இணையத்தில் விராட் கோலி மும்பையின் லின்கிங் வீதியோரத்தில் ‘பூமா‘ நிறுவனத்தின் பொருட்களை விற்பது போன்ற புகைப்படமொன்று வெளியாகி மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியது.

ஆனால், சற்று உன்னிப்பாக பார்த்தால், குறித்த புகைப்படத்தில் இருப்பவர் கோலி அல்ல என்பதும் கோலியை போலவே தோற்றம் கொண்டிருக்கும் மற்றொரு நபர் என்பதும் தெரிய வரும்.

மும்பை



# மகனைக் காப்பாற்ற உடல் எடையைக் குறைத்த தந்தை

மும்பையைச் சேர்ந்தவர் `யோகேஷ் வாஸ்`. இவருக்கு 2 வயதான மகன் ஒருவன் உள்ளான்.

இந்நிலையில் அண்மையில் அவரது மகனுக்கு அரிய வகை கல்லீரல் நோய் இருப்பது தெரியவந்துள்ளது.


இதனையடுத்து மருத்துவர்கள் மேற்கொண்ட பரிசோதனையில் யோகேஸ் அவரது மகனுக்கு கல்லீரல் வழங்க தகுதியானவர் எனக் கண்டறியப்பட்டது.


எனினும் அவர் அதிக உடல் எடையுடன் இருந்துள்ளதால் அவரது உடல் எடையைக் குறைக்குமாறு மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் தீவிர உடற்பயிற்சி மற்றும், கடுமையான உணவுக் கட்டுப்பாடைப் பின்பற்றி இரண்டு மாதங்களில் சுமார் 10 கிலோகிராம் எடையை யோகேஷ் குறைத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சிறுவனுக்கு மருத்துவர்களால் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்கு







# FIFA உலகக் கோப்பை; வைரலாகும் ஆர்ஜென்டினா தேநீர்க்கடை

காற்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் ‘ FIFA உலகக் கோப்பைத் தொடரானது‘ கடந்த 20 ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமானது.

இந்நிலையில் மேற்கு வங்கம் மாநிலத்தின், இச்சாப்பூர் என்ற பகுதியைச் சேர்ந்த காற்பந்து ரசிகரான ஷாஹிப் ஷங்கர் பந்த்ரா என்பவர் தனது வீடு மற்றும் தேநீர் கடையுடன் கூடிய 3 மாடிக் கட்டிடத்தை ஆர்ஜென்டினாவின் தேசியக் கொடியின் நிறமான நீளம் மற்றும் வெள்ளை நிறத்தில் வர்ணம் பூசி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பகுதியை அனைவரும் ‘குட்டி ஆர்ஜென்டினா‘ என அழைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலகக் கிண்ணம்:

# மெக்ஸிக்கோவை வென்ற ஆர்ஜென்டீனா

### இறுதி 16 அணிகளுக்கான சுற்றில் நடப்புச் சம்பியன்கள்

கட்டாரில் நடைபெற்றுவரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற மெக்ஸிக்கோ உடனான குழு சி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனா வென்றது.

ஆர்ஜென்டீனா சார்பாக, லியனல் மெஸ்ஸி, என்ஸோ பெர்ணாண்டஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டென்மார்க்குடனான குழு டி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ், இறுதி 16 அணிகளுக்கான விலகல் முறையிலான சுற்றுக்குத் தகுதி பெற்றது. பிரான்ஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கிலியான் மப்பே பெற்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற சவுதி அரேபியாவுடனான குழு சி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் போலந்து வென்றது. போலந்து சார்பாக, பியோத்தர் ஸிலென்ஸ்கி, றொபேர்ட் லெவன்டோஸ்கி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, துனீஷியாவுடனான குழு டி போட்டியில் மிற்செல் டியூக் பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் அவுஸ்திரேலியா வென்றிருந்தது.

இந்நிலையில், இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஜி போட்டியில் சேர்பியாவை கமரூன் எதிர்கொள்ளவுள்ளதுடன், மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எச் போட்டியில் தென்கொரியாவும், கானாவும் மோதவுள்ளதுடன், இரவு 9.30 மணிக்கு குழு ஜி போட்டியில் பிரேஸிலும், சுவிற்ஸர்லாந்தும் மோதவுள்ளன. தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எச் போட்டியில் போர்த்துக்கல்லும், உருகுவேயும் பலப்பரீட்சை நடாத்தவுள்ளன.



ஆப்கானிஸ்தானுக்கெதிரான 2ஆவது ODI–இல்

## இலங்கைக்கு வெற்றியிலக்கு 229 ஓட்டங்கள்

ஆப்கானிஸ்தானுக்கெதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI)-இல் இலங்கைக்கு வெற்றியிலக்காக 229 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தானின் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி, தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில், கசுன் ராஜித 3, மகேஷ் தீக்ஷன 2, விக்கெட்டைக் கைப்பற்றினர்.



## கபடியின் தேசிய சாதனையாளர்கள் கௌரவிப்பு

நூருல் ஹுதா உமர்

நிந்தவூர் பிரதேசத்தின் கபடி வீரர்கள் தேசிய, சர்வதேச ரீதியில் கபடிப் போட்டிகளில் தொடர்ச்சியாக தங்களது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் நிந்தவூரின் கபடி வீரர்களை வாழ்த்தி கௌரவிக்கின்ற நிகழ்வு Realx garden வளாகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கபடி வீரர்கள் கௌரவிக்கப்பட்டதோடு, நிந்தவூரின் கபடி துறையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சிறந்து விளங்க காரணமாய் அமைந்தவர்களை கௌரவித்து அவர்களுக்கான நினைவுச்சின்னம் வழங்கிவைக்கப்பட்டது.

நியூசிலாந்து எதிர் இந்தியா:

# இரண்டாவது ODI–இல் முடிவில்லை




நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி (ODI)-இல் முடிவேதும் பெறப்படவில்லை.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து வென்றிருந்த நிலையில், ஹமில்டனில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் மழை காரணமாக தாமதமாக இடம்பெற்ற நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் கேன் வில்லியம்ஸன், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, 4.5 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 22 ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்டது. பின்னர் 29 ஓவர்களாக போட்டி குறைக்கப்பட்டு மீண்டும் இந்தியா களமிறங்கிய நிலையில் 12.5 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 89 ஓட்டங்களைப் பெற்றபோது மீண்டும் மழை குறுக்கிட்ட நிலையில் போட்டி கைவிடப்பட்டது. அப்போது களத்தில் ஷுப்மன் கில் ஆட்டமிழக்காமல் 45 (42) ஓட்டங்களுடனும், சூரியகுமார் யாதவ் ஆட்டமிழக்காமல் 34 (25) ஓட்டங்களுடனும் காணப்பட்டிருந்தனர்.

அமெரிக்கா

# வட்ஸ்-அப் பயனர்களின் தொலைபேசி எண்கள் விற்பனை?

### வெளியான அதிர்ச்சி தகவல்

உலக அளவில் 2.20 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் வட்ஸ் அப் செயலியினைப் பயன்படுத்தி வருகின்றனர்.

குறுஞ்செய்தி அனுப்புவது மட்டும் இல்லாமல், புகைப்படங்கள், வீடியோக்கள், பைல்கள் எனப் பல வசதிகளை வட்ஸ் அப் தனது பயனர்களுக்கு அளித்து வருகிறது.

இதனால், வாட்ஸ் அப் பயன்படுத்துவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

அதே சமயம் வட்ஸ் அப்பில் பயனர்களின் தரவுகள் குறித்த பாதுகாப்பின்மை அச்சமும் நிலவி வருகிறது.

இந்நிலையில் உலகில் மிகப்பெரிய ஹேக்கர்களின் தகவல் திருட்டில் கிட்டத்தட்ட 50 கோடி வட்ஸ் அப்பயனர்களின் தொலைபேசி எண்கள் திருடப்பட்டு ஒன்லைனில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளதாக அதிர்ச்சி அறிக்கையொன்று வெளியாகியுள்ளது.







சைபர்நியூஸ் அறிக்கையின்படி ஒரு ஹேக்கர் வெளியிட்டுள்ள விளம்பரத்தில், 2022 தரவுகளின் அடிப்படையிலான சுமார் 48.7 கோடி வட்ஸ்அப் பயனர்களின் தொலைபேசி எண்கள் விற்பனைக்கு தயாராக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தரவுகளில் அமெரிக்கா, பிரித்தானியா, எகிப்து, இத்தாலி, சவுதி அரேபியா மற்றும் இந்தியா உட்பட 84 நாடுகளைச் சேர்ந்த வட்ஸ்அப் பயனர்களின் தொலைபேசி எண்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## காதலனின் தொலைபேசியில் பெண்ணின் குரல்

### வீட்டைக் கொளுத்திய காதலி

காதலனின் தொலைபேசியில் வேறு ஒரு பெண்ணின் குரல் கேட்டதால் ஆத்திரமடைந்து அவரது வீட்டைக் கொளுத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டெக்சாஸைச் சேர்ந்தவர் 23 வயதான செனாய்டா மேரி சோட்டோ. இவர் அண்மையில் அவரது காதலனைத் தொலைபேசியில் அழைத்துள்ளார்.

இதன்போது அவ் அழைப்பினை வேறு ஒரு பெண் எடுத்து பேசியுள்ளார். இதனால் தனது காதலன் தன்னை ஏமாற்றுவதாக நினைத்த அவர் ஆத்திரத்தில் அவரது காதலனின் வீட்டுக்குச் சென்று அவரது படுக்கையறையில் தீ வைத்துள்ளார்.

அத்தீ அவரது வீடு முழுவதும் பரவியதால் சுமார் 75 000 அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸாரின் விசாரணையில் அந்த தொலைபேசி அழைப்பை காதலனின் உறவினர் பெண் அட்டெண்ட் செய்து பேசியமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக காதலன் கொடுத்த புகாரின் பேரில் மேரி கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா



## உலகின் மிக வயதான பூனை

பிரித்தானியாவைச் சேர்ந்த ஃப்லோஸி என்ற பூனை உலகின் மிக வயதான பூனை என்ற உலக சாதனையைப் படைத்துள்ளது.

இப்பூனையானது கடந்த 1995 ஆம் ஆண்டு லிவர்பூல் நகரத்தில் வீதியோரமாக பிறந்துள்ளது எனவும் அருகில் இருந்த மருத்துவமனை ஊழியர் ஒருவர் அதனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்று 10 ஆண்டுகள் வளர்த்து வந்துள்ளார் எனவும், அவர் மரணித்த பின்னர் அவரது தங்கை வளர்த்து வந்துள்ளார் எனவும்,பின்னர் பூனைக் காப்பகமொன்றில் அது விடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதன்போது அப்பூனைக் காப்பக பொறுப்பாளரான நாவ்மி ரோஸ்லின் என்பவரே ஃப்லாஸியின் வயதைக் கண்டறிந்துள்ளார் எனவும், பின்னர் அப் பூனையை காப்பகத்தில் இருந்து விக்கி என்பவர் எடுத்துச் சென்று வளர்த்து வருகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அந்தவகையில் குறித்த பூனையானது விரைவில் தனது 27 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூனைகளின் வளர்ச்சி விகிதப்படி அதற்கு தற்போது 124 வயது என்கிறார்கள். இது குறித்து அப் பூனையின் உரிமையாளரான விக்கி கருத்துத் தெரிவிக்கையில் “நான் ஒரு உலக சாதனையாளருடன் என் வீட்டைப் பகிர்ந்து கொள்வேன் என நினைக்கவில்லை” என மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

பிரேஸில்



## பூமியில் கிடைத்த ஏலியன் கைகளால் பரபரப்பு

பிரேஸிலைச் சேர்ந்த லெடிசியா கோம்ஸ் சன்டியாகோ என்ற பெண்ணும், அவரது காதலரான டெவனைர் சாவ்சா என்பவரும் அண்மையில் இல்ஹா காம்ப்ரிடா கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் கிடந்த மிகவும் நீளமான கையொன்றைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த கையை வீடியோ எடுத்து இணையத்தில் பதிவேற்றிய நிலையில் குறித்த வீடியோவானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்து.

அமெரிக்கா



## முதல் இடத்தில் ‘அம்பர் ஹெர்ட்’

‘ 2022ஆம் ஆண்டு கூகுளில் அதிகம் தேடப்பட்ட பிரபலங்களின் பட்டியல் அண்மையில் வெளியானது.

இதில் அமெரிக்காவில் அதிகமாகத் தேடப்பட்ட பிரபலமாக முதல் இடத்தை பிடித்துள்ளார் பிரபல ஹொலிவூட் நடிகை ஆம்பர் ஹெர்ட்.

இவ் வருடத்தின் முதற்பாதியில் மிகவும் பரபரப்பாக பேசப்பட்ட விடயங்களில் ஒன்றாக ஹொலிவூட் நட்சத்திர தம்பதியான ஜோனி டெப் - ஆம்பர் ஹெர்டின் விவாகரத்து வழக்கு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தன் மீது பொய்யாக குடும்ப வன்கொடுமை குற்றச்சாட்டை சுமத்திய முன்னாள் மனைவி ஆம்பர் ஹெர்ட் மீது அவமதிப்பு வழக்கை ஜோனி டெப் தொடுத்திருந்தார்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் நடந்த இவ் வழக்கில் டெப்பிற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்நிலையில், இவ்வருடத்தில் அதிகம் தேடப்பட்ட பிரபலங்களின் பட்டியலில் ஆம்பர் ஹெர்ட் முதலிடத்தை பிடித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 28 நவம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.